பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (02.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 186

# பிரபாவை நேரில் சந்திக்கவும் ஜனாதிபதி மஹிந்த தயாராம்!

## ஆனால் இப்போதென்றால் வன்னிக்கு செல்ல முடியாது என்றும் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 2

**"அமைதி முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரில் பேசத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்போதென்றால் பிரபாகரனைச் சந்திப்பதற்காக வன்னிக்குச் செல்ல முடியாது."**

**- இப்படிக் கூறுகின்றார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரிடமே அவர் இவ்வாறு நேரடியாகத் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களின் பொறுப்பாளர்களை நேற்றுக் காலை அலரி மாளிகைக்கு அழைத்து காலைச் சிற்றுண்டி வழங்கி அவர்களோடு ஜனாதிபதி மஹிந்த உரையாடினார். நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஊடக ஆசிரியர்களுடன் தனித் தனியாக ஓரிரு நிமிடங்கள் அவர் பேசினார்.

"இன்றைய நெருக்கடி நிலைமையைச் சீராக்க நீங்கள்தான் ('உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகள் தாம்) ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யமுடியும். செய்ய முயலுங்களேன்!" - என்று வலியுறுத்திய ஜனாதிபதி மஹிந்த, சிரித்துக்கொண்டே 'உதயன்', 'சுடர் ஒளி'யைக் கடிந்து கொள்ளவும் தவறவில்லை.

"ஆக்கபூர்வமாகச் செய்வதை விடுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று கொழும்பில்

கொழும்பு,ஜூன் 2

அமைதி முயற்சிகள் சம்பந்தமான அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது.


அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்தக் கூட்டத்தின்போது ஆராயப் படவுள்ளதாகத் தெரிகின்றது. போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஒஸ்லோவில் நடத்தப்படவுள்ள சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்றைய சந்திப்பின்போது விளக்கிக் கூறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் மீதான

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோவில் நடப்பது பேச்சு அல்ல; அனுசரணையாளருடனான சந்திப்பே!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜூன் 2

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடக்கவிருப்பது பேச்சல்ல. இருதரப்பும் - அரசும், புலிகளும் - சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக ஒஸ்லோவுக்குச் செல்லவில்லை.

'ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்குப் பின்னால் எழுந்திருக்கின்ற நெருக்கடியான நிலைமைகள் தொடர்பாகவும், எமது தலைமைப்பீடத்தின் தீர்க்கமான சில நிலைப்பாடுகள் குறித்தும் நோர்வே அனுசரணையாளர்களுக்கும் கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. அதற்கான ஒரு சந்திப்பே இது. அந்த அடிப்படையில்தான் எமது தலைமைப்பீடம் இந்தச் சந்திப்புக்கான நோர்வேயின் அழைப்பை சாதகமாகப் பரிசீலிக்கிறது."

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன். நேற்றுக்காலை கிளிநொச்சியில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனைச் சந்தித்துப்பேசிய பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையால் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான நிலைமைகள் உட்படப் பல்வேறு (2ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உயர்குழு ஞாயிறன்று ஒஸ்லோ நோக்கிப் புறப்படுகிறது

### தமிழ்ச்செல்வன், நடேசன், புலித்தேவன் ஆகியோரும் அணியில்

கொழும்பு,ஜூன் 2

அடுத்த 8, 9 ஆம் திகதிகளில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலிருந்து கட்டுநாயக்கா வழியாக நோர்வே புறப்படும் எனக் கொழும்பில் நேற்று தகவல்கள் வெளியாகின.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் ஆகியோர் உட்பட புலிகளின் அணி ஒன்று நாளைமறுதினம் நோர்வே புறப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியின் மட்டு. அலுவலகம் மீது நேற்றுக் காலை கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு,ஜூன் 2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யின் மட்டக்களப்பு மாவட்டத் தலைமையகத்தின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஈ.பி.டி.பி. யின் கிழக்கு மாகாண முக்கியஸ்தரும், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கந்தையா அருமைலிங்கம் (வயது -59) படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமையகத்தின் குளியறையில் இருந்தபோது அருமைலிங்கம் மீது காலை 5.45 மணியளவில் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈ.பி.டி.பி.யின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார்.

படுகாயமடைந்த கந்தையா அருமைலிங்கம் விசேட ஹெலிக் கொப்டர் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கச்சேரி - நல்லூர் வீதிக் கொள்ளை; இரு சகோதரர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள இரண்டு வீடுகளில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளை இடம்பெற்ற வீடொன்றில் கொள்ளையர்கள் தேசிய அடையாள அட்டை ஒன்றைத் தவறவிட்டுச் சென்றிருந்தனர். அந்த அடையாள அட்டையின் அடிப்படையில் நாயன்மார்கட்டுப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று தேடுதல் நடத்தியது. அந்த இளைஞர் குழுவின் தேடுதலின்போது சகோதரர்கள் இருவரை அடையாளம் கண்டதாகக் கூறப்படுகிறது.

அவர்களிருவரையும் நையப்புடைத்த இளைஞர் குழு பின்னர் அவர்கள் குறித்து பொலீஸாரிடம் தகவல் தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் வவுனியாவில் சுட்டுக் கொலை!

வவுனியா,ஜூன் 2

வவுனியா, பண்டாரிக்குளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டனர். காலை 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.'

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான செபஸ்தியன் ராஜப்பன் (வயது-37), ஆறுமுகம் லோகநாதன் (வயது -19) ஆகியோரே கொல்லப்பட்டிருக்கின்றனர். 'தினமுரசு' பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டு வந்த இவர்கள் இருவரும், கொழும்பிலிருந்து வந்த 'தினமுரசு' பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பண்டாரிக்குளம் உக்கிளாங்குளம் வீதி வழியாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே சுடப்பட்டனர் என்று கூறப்பட்டது. இவர்களில் ராஜப்பன் என்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமுர்த்தி முத்திரைக்கு இனிமேல் அரிசி மட்டுமே விநியோகம்

## பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கை

வலி.வடக்கு,ஜூன்2

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் முத்திரைப் பெறுமதிக்கு அரிசி மட்டும் வழங்குவது சம்பந்தமான சுற்றறிக்கை பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் என்பவற்றுக்கு யாழ்.செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரைக்கு அரிசி,சீனி, மா, பருப்புப் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலைமையில் தற்போது சமுர்த்தி முத்திரைக்கு தனியே அரிசி மட்டும் வழங்குவது சம்பந்தமாக உரிய ஆலோசனையை வழங்கும்படி சுற்றறிக்கை மூலம் கேட்கப்பட்டுள்ளது.

தனியே அரிசி மட்டும் வழங்குவதன் மூலம் பொதுமக்கள் பாதிப்படையும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன என்று பலரும் தெரிவிக்கின்றனர். (86)

## மின்சாரசபை ஊழியர் மின்தாக்கி மரணம்

கரவெட்டி,ஜூன் 2

நவிண்டில் சாண்டார் சந்தைப் பகுதியில் தடைப்பட்ட மின்சார விநியோகத்தை சீராக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கி மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த பே.அன்னராஜசிங்கம் (வயது-47) என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. (70)

## வல்லை ஆஸ்பத்திரியில் இரத்ததானம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அமரர் கணேசரத்தினம் - பிரேம்நாத்தின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

இதில் நெடியகாடு விளையாட்டுக் கழக இளைஞர்களும் இரத்ததானம் செய்யவுள்ளார்கள். ஆகவே இரத்ததானம் செய்ய விருப்பம் உள்ள ஏனையவர்களும் இவ் இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்து நோயாளர்களின் உயிர்களை காப்பாற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த இரத்ததான முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர். (15)

## அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

அல்வாய் வேலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வை ஒட்டிய கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு எண்ணைக் காப்புச் சாத்துதல் இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் அருளுரையையும் தர்ம சாஸ்தா பீடத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ க.மகாதேவக் குருக்கள், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க. சுதர்சனக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையையும் தும்பளை நெல்லண்டை பத்திரகாளி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த ராஜக் குருக்கள் சிறப்புரையையும் நிகழ்த்துவர். (173)

## உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு

புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்தச் செயலமர்வு முன்னர் ஒழுங்குபடுத்தப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆசிரியர்களை இதில் தவறாது பங்கேற்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

நயினாதீவு தில்லைவெளி பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல், வேள்வி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 9 நாள்கள் நடைபெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை வேள்வி இடம்பெறும்.

இன்று வெள்ளிக்கிழமை கும்பஸ்தாபனம், பந்தல்கால் போடல் என்பன இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை இரண்டாம் நாள் முதல் 7ஆம் நாள்வரை விசேட அபிஷேகம், விசேட சங்காபிஷேகம் விசேட பூஜை என்பன நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை விசேட அபிசேகம், விசேட பூசை என்பன நடைபெற்று இரவு நான்கு சாமம் அபிசேகம் பூசை நடைபெறும்.

10ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குப் பொங்கலுக்கான விநாயகப் பானை வைத்தலுடன் வேள்வி விழா ஆரம்பமாகும்.

* * *

நீர்வேலி வடக்கு பராசக்தி காளி அம்மன் ஆலய மகாகும் பாபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 6.30 மணிக்கு இடம்பெறும். எதிர்வரும் 6ஆம் திகதி பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவர். (72)

* * *

வரணி வடக்கு கும்பிட்டான் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (122)

* * *

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் நற்கருணை திருவிழா நடைபெறும். 13ஆம் திகதி காலை ஏழு மணிக்கு திருப்பலிப் பூசையும் அதிகாலை அதனைத் தொடர்ந்து திருச்சொரூபபவனி நடைபெறும்.

பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு எம்.ஜேசுரட்ணம் அடிகளார் பூசைகளை நிறைவேற்றுவார். (135)

* * *

சுழிபுரம்,ஜூன்2

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயப் பெரும் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 16ஆம் திகதி 1008 சங்காபிசேகம் நடைபெறவுள்ளது. அன்று கந்தரனுபூதியை மனனம் செய்யும் போட்டியில் வெற்றிபெற்ற வர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (28)

* * *

பருத்தித்துறை தம்பசிட்டி ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் இந்த உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 10ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (15)

## விளையாட்டு வீரர்களை வருகைதருமாறு அறிவுறுத்து

வட்டக்கச்சி,ஜூன் 2

தமிழீழ விளையாட்டுத்துறையில் மக்கள் கட்டுமானப் பயிற்சிகளை மேற்கொண்ட அனைத்து விளையாட்டு வீரர்களையும் புதிதாக பயிற்சியை மேற்கொள்ளவுள்ள வீரர்களையும் இன்று முற்பகல் 10 மணிக்கு முன் விளையாட்டுத்துறை பணிமனைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அனைத்து வீரர்களும் சீருடை, அறிமுக அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்க வேண்டும் என தமிழீழ விளையாட்டுத் துறையினர் கேட்டுள்ளனர். (405)

## அகதிகள் வருகை ஓய்ந்தபாடில்லை!

இராமேஸ்வரத்திலிருந்து மேலும் 56 அகதிகள் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்தடைந்தனர்.

திருகோணமலை பள்ளத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 16 குடும்பங்களின் 18 ஆண்கள், 23 பெண்கள், 15 குழந்தைகள் உட்பட 56 பேர் நான்கு படகுகளில் இராமேஸ்வரம் வந்தனர்.

நேற்றுமுன்தினம் தமிழகம் வந்த அகதிகளுடன், இவ்வருடம் இதுவரை இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தோரின் எண்ணிக்கை 2,815 ஆக உயர்ந்திருக்கிறது.

இராமேஸ்வரம் வந்த அகதிகள், பொலீஸாரின் விசாரணையின் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

# ஒஸ்லோவில் நடப்பது பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார் சு.ப.தமிழ்ச் செல்வன்.

அப்போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

கேள்வி:- இந்த சந்திப்பு தொடர்பாக?

பதில்:- கண்காணிப்புக்குழு தலைவர் கடந்த மூன்று தினங்களாக இங்கு தங்கியிருந்து நிலைமைகளை பார்வையிட்டார். எமது தளபதிகள், மக்களை சந்தித்து பேசியிருக்கின்றார். இன்று அவர் எம்மை சந்தித்தார். யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் இன்று பேசியிருக்கின்றோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தடை வந்ததன் பின்னர் சமாதான முன்னெடுப்புக்கள், கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக எடுக்க வேண்டிய தீர்மானங்கள் குறித்தும் இன்னும் ஓரிரு தினங்களில் எமது தலைமைப்பீடம் தீவிரமாக பரிசீலிக்க இருக்கின்றது. அதன்பின்பு கண்காணிப்புக் குழுவினரோடும் அனுசரணையாளர்களோடும் தொடர்புகொள்வோம் என்று அவர்களிடம் கூறியிருக்கின்றோம்.

கேள்வி:- நோர்வேக்கு செல்ல விருக்கின்றீர்களா?

பதில்:- யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேசுவதற்கு நோர்வே அழைத்திருக்கின்றது. இவ்வழைப்பை எமது தலைமைப்பீடம் சாதகமாக பரிசீலிக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு பின்னர் எமது தலைமைப் பீடம் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்க விருக்கின்றது, எடுத்திருக்கின்றது என்பதை எடுத்துச் செல்வதாகவே இந்த ஒஸ்லோ பயணம் அமையவுள்ளது.

கேள்வி: ஒஸ்லோவில் நடைபெறவுள்ள சந்திப்புக்கு நோர்வே இலங்கை அரசாங்கத்தையும் அழைத்திருக்கின்றது. எனவே, இச் சந்திப்பின்போது நோர்வே இருதரப்பையும் ஒன்றாக சந்தித்து பேசவுள்ளதா அல்லது தனித் தனியாகப் பேசவுள்ளதா?

பதில்: இது பேச்சுவார்த்தை அல்ல. இருதரப்பும் சந்தித்து பேசுவதற்கு ஒஸ்லோவுக்கு செல்லவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருதரப்பு என்ற வகையில் இருதரப்பையும், நோர்வே அரசு அழைத்திருக்கின்றது. கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளோடு பேசவேண்டும். ஐரோப்பிய ஒன்றிய தடைக்கு பின்னால் எழுந்திருக்கின்ற நெருக்கடியான நிலைமைகள் தொடர்பாகவும், இனி முன்னெடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் எமது தலைமைப்பீடத்தின் தீர்க்கமான சில நிலைப்பாடுகளை நோர்வே அனுசரணையாளர்களுக்கும் கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. அந்த அடிப்படையில்தான் எமது தலைமைப்பீடம் இந்த அழைப்பை சாதகமாக பரிசீலிக்கின்றது.

கேள்வி: கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உறுப்பினர்களும் உள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத் தடை இவ்வுறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

பதில்: நிச்சயமாக அது பாதிப்பை ஏற்படுத்தும். அதனால், எமது தலைமைப்பீடம் ஓரிரு தினங்களில் கூடி இது பற்றி பரிசீலிக்கவிருக்கின்றது. அமைதி முயற்சிகளிலோ சமாதான முன்னெடுப்புகளிலோ இருதரப்பும் சமத்துவமாக - சமதரப்பு என்ற நிலையில் - பார்க்கப்படுவது அவசியம். அத்தகைய நிலைப்பாடுள்ளவர்களோடு தான் சமாதான முயற்சி பற்றியோ அமைதி முயற்சி பற்றியோ பேசலாம். பக்கச்சார்பான நிலையில் இருதரப்பையும் கையாள - தலையீடுசெய்ய - பங்காற்ற - முற்படுவதை மக்களாலும் எமது தலைமைப்பீடத்தாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

கேள்வி:- தூதுக்குழுவில் யார் யார் செல்கின்றீர்கள்?

பதில்: இதுவரை தலைமைப்பீடம் முடிவெடுக்கவில்லை. ஒஸ்லோவுக்கு செல்வதாக இருந்தாலும் ஒஸ்லோவில் என்ன விடயம் பேசப்படவேண்டும் என்பதை எமது தலைமைப் பீடம் ஓரிரு நாள்களில் கூடி முடிவுசெய்யும் அம் முடிவுகளை எடுத்துச்செல்வதாகவே ஒஸ்லோ பயணம் அமையும்.

கேள்வி:- தற்போதைய நெருக்கடி நிலையில் தங்களது போக்குவரத்து ஒழுங்குகள் எந்தளவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் கொண்டதாக இருக்கும்?

பதில்: புறப்படுவதாக இருந்தால் முழுமையாகப் பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் அனைத்துக்கும் [illegible] கள் பொறுப்பேற்க [illegible] கூறியிருக்கின்றோம். அதை மீண்டும் நாம் உறுதிப்படுத்திய பின்னர்தான் பயணம் அமையும்.

கேள்வி: நோர்வே பயணத்துக்கு தென் தமிழீழத்தில் இருந்து தளபதிகள் வன்னிக்கு வருதல் என்ற விடயமும் அடங்குமா?

பதில்: பேச்சுவார்த்தைக்காக ஒஸ்லோவுக்கு நாங்கள் செல்லவில்லை. எமது தலைமைப்பீடம் முக்கியமான கட்டத்தில், முக்கியமான தீர்மானத்தை எடுத்தது. அதனை நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவிப்பதற்கான பயணமே தவிர, சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான பயணம் இல்லை இது. அதனால் நாம் தளபதிகள் வன்னி வருகையை வலியுறுத்தவில்லை, அதை எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் எமது தளபதிகள் போராளிகளின் பயணம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் தலைவர் சாதகமான முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ள தாங்கள் முயன்றுகொண்டிருகின்றார் எனவும் கூறியிருக்கின்றார்.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றிய மும் இணைத்தலைமை நாடுகளும் சிறிலங்கா அரசு மீது அழுத்தம் கொடுத்தன என்று வெளியான செய்தி உண்மையானதா அல்லது வெறுமனே அறிக்கைமயப்பட்டது என்று நினைக்கின்றீகளா?

பதில்: அவர்களால் சிறிலங்கா அரசு பற்றியும் அதன் சமாதான விரோதப்போக்குகள் பற்றியும் சொல்லப்பட்ட விடயங்கள் உண்மைக்கு மாறானவை அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை தான். இருந்தாலும் அரசின் பயங்கரவாதத்தை எப்படித் தடுக்கலாம்? பயங்கரவாத அரசை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றி சர்வதேச சமூகம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிலையாகத் தான் அவர்களின் அறிக்கையின் வெளிப்பாடு இருக்கின்றது.

ஏனெனில், அதில் கூறப்பட்ட பெரும்பாலான விடயங்கள் அரச பயங்கரவாதத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட மோசமான நடவடிக்கைகள் பற்றியவை. அந்த வகையில் விடுதலைப்புலிகள் மீது போடப்படுகின்ற அழுத்தத்துக்கு நிகராக அல்லது அதை விட மேலாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தத்தை போடவேண்டிய நிலையில் அனைத்துலக சமுதாயம் இருக்கின்றது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, இவ்வறிக்கை ஒரு சிந்திக்க வைக்கின்றதாகவும் வெளிப்படையாகப் பார்க்கின்றபோது பயங்கரவாத அரசுகள் பற்றி அனைத்துலக சமுதாயமே விரைவில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்பதாகவுமே இந்த அறிக்கை அமைந்திருக்கின்றது.

கேள்வி: இணைத்தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைகளில் புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதம் என்று குறிப்பிட்டிருக்கின்றது. அரசின் செயற்பாடுகளை ஒட்டுக்குழுக்களின் மீது போட்டுவிட்டு தப்பியுள்ளதாக தோற்றப்பாடு தெரிகின்றதா?

பதில்: அனைத்துலக சமூகம் தொடர்ந்தும் ஒரே தவறை இழைத்துக் கொண்டிருப்பதாகவே கருதுகின்றேன் ஏனெனில் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு பெரிய கொடுமைப்படுத்தப்படுகின்ற மக்கள் மீதும் அவர்களின் தலைமை மீதும் அனைத்துலக சமுதாயம் போட்டிருக்கின்ற அதிகளவு அழுத்தமும் அதற்கு காரணமானவைகளை கண்டிப்பதில் காட்டும் மென்மையான போக்குமே இன்று பல இடங்களில் இலங்கைத் தீவில் நெருக்கடிக்கு காரணமாக அமைந்து கொண்டிருக்கின்றன. அனைத்துலக சமுதாயம் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்ற பயங்கரவாத அரசுகளை எவ்வாறு கையாள்வது என்று தீர்க்கமான முடிவுகளை எடுக்கின்ற நேரம் அதற்கு ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

கேள்வி:- ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடைசெய்துள்ள நிலையிலும் தொடர்புகளை பேணப்போவதாக கூறியுள்ளதே?

பதில்:- தொடர்பு எவரும் கொள்ளலாம். எமது சமநிலையை குலைத்துவிட்டு தொடர்பு கொள்வதால் எந்த விதமான பயன்களைப் பெறப்போகின்றார்கள் என்பதுதான் தெரியவில்லை. ஐரோப்பிய யூனியனின் தடையென்பது தெற்கிலே சிங்கள இனவாதிகள் மட்டத்தில் அரச மட்டத்திலும் கொண்டாடப்படும் நிலையை நாம் பார்க்கின்றோம். எந்தவிதமான பயங்கரவாதத்தையும் தமிழர்கள் மீது ஏவிவிடலாம் என்ற துணிவை சிங்களப் பேரினவாதத்திற்கு இந்தத் தீர்மானம் ஏற்படுத்தியுள்ளது. கருத்துக்கள் அறிக்கைகள் இதையே உணர்த்துகின்றன. ஐரோப்பிய யூனியனின் தடை தமிழர்களை கடும்பாதிப்புக்குள் தள்ளியுள்ளது என்பதே எம்மால் உணரமுடிகின்றது என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# தமிழ்த் தேச சுதந்திர எழுச்சி தேசங்கள் எங்கும் எதிரொலிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத் தடை குறித்து தென்னிலங்கைச் சிங்களம் அகமகிழ்வது அப்பட்டமாகப் புலப்படுகின்றது. அரசும், ஆளும் கட்சியும் மட்டுமன்றி, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் கூட இந்தத் தடையை சந்தோஷமாக வரவேற்றிருக்கின்றது. ஆனால், இந்த மகிழ்வும், வரவேற்பும் விளக்கமின்மையால் - அறியாமையால் - எழுந்த விடயங் கள் என இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"இந்தத் தடை சமாதான முன்னெடுப்புகளுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை. இந்தத் தடை புலிகளை சர்வதேச சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்தலாம் என ராஜபக்ஷ அரசு ஒரு புறம் ஆர்ப்பரிக்கலாம். புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு இத்தடை தூண்டுகோலாக அமையலாம் என அரசுத் தரப்பு மற்றொரு புறம் பேருவகை அடையலாம்.*

*"ஆனால், உண்மையில் எதிர்விளைவுகளையே இத்தடை தரப் போகின்றது. இத்தகைய தடைகள் மூலம் தங்களை அடிபணிய வைக்க முடியாது என்ற கடும் போக்கைப் புலிகள் இன்னும் மேலும் பலமாக சர்வதேச சமூகத்துக்கு தமது நடவடிக்கைகள் மூலம் வெளிக்காட்டுவதற்கு முன்வருவார்கள். அதற்கான சந்தர்ப்பத்தை இத்தடை அவர்களுக்கு வழங்கப் போகின்றது."*

- என்று தென்னிலங்கைச் சிங்களத்தை எச்சரிக்கின்றார் விக்கிரமபாகு கருணாரத்ன.

ஐரோப்பிய ஒன்றியத் தடை வந்த கையோடு அது குறித்த புலிகளின் பிரதிபலிப்பை புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் வெளிப் படுத்தியபோது முன்வைத்த கருத்துகளையே விக்கிரபாகு கருணா ரத்னவின் விளக்கமும் உறுதிப்படுத்துகின்றது.

"ஐரோப்பிய நாடுகளில் வதியும் புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் அரசியல் ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் தடுத்து நிறுத்தி, எமது மக்களிடமிருந்து எமது விடுதலை இயக்கத்தை அந்நியப்படுத்தி, ஓரம் கட்டி விடலாம் என ஐரோப்பிய ஒன்றியம் கருதுமானால் அது மிகப் பெரிய வரலாற்றுத் தவறாகவே முடியும்." - என்று தெளிவாகவும், உறுதியாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்திருந்தார் மதியுரைஞர் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தடை விதிக்கும் முடிவை ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க விழைந்த தினத்தில், உலகெங்கும் புலம் பெயர்ந்த நாடுகளில் வதியும் ஈழத் தமிழர்கள் கொதித்தெழுந்து, தத்தமது நாடுகளில் ஒன்றுபட்டு, ஒரே குரலில் தமது எதிர்ப்புணர்வை ஐக்கியமாக வெளிப்படுத்தி, மேற்குலகை ஓர் அசத்து அசத்தியிருக்கின்றார்கள் என்ற செய்தி, ஈழத்துக்கு நாலா புறத்திலிருந்தும் கிடைத்த வண்ணம் உள்ளன.

விடுதலைப் புலிகளை ஏற்கனவே தடை செய்த நாடுகளான ஆஸ்திரேலியா, கனடா போன்ற தேசங்களில் கூட தலைவர் பிரபாகரனின் பெரிய தோற்றப் படங்களையும், புலிக் கொடிகளையும் ஆயிரக்கணக்கில் தாங்கியவாறு ஒவ்வொரு இடங்களிலும் பல்லாயிரக்கணக்கில் ஜன சமுத்திரம் என அலை மோதித் திரண்ட ஈழத் தமிழர்களின் கூட்டங்கள் மேற்குலகை ஒரு கணம் அதிர்ச்சிக்குள்ளும், ஆழ்ந்த சிந்தனைக்குள்ளும் மூழ்கடித்திருக்கும் என்பது நிச்சயம்.

வேறு பல இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்து, புலிகளுடன் முரண்பட்டு, அவர்களுக்குப் பின்னால் அணி திரள மறுத்து, புலம் பெயர் நாடுகளில் ஒதுங்கி நின்ற மாற்று அணியினர் கூட, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடையை, எதிர்த்து அன்றைய தினம் ஏனைய தமிழ் உறவுகளோடு ஒன்றுபட்டு வீதிக்கு இறங்கியதை அந்தந்த நாடுகளிலிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன.

அவர்களைப் பொறுத்தவரை இந்தத் தடை புலிகள் இயக்கத்துக்கு எதிரானது அல்ல; தமிழினத்துக்கே எதிரானது என்ற எண்ண அலையே - உணர்வே - புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதுவே, இந்தத் தடை விடயத்தில் வெள்ளை ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழுணர்வைப் பீறிட்டு ஓடவும், தமிழர் என்ற ஐக்கியத்தை வலுப்படுத்தவும் வைத்திருக்கின்றது.

இந்த உணர்வெழுச்சி மதியுரைஞர் பாலா கூறிய இன்னொரு விடயத்தையும் உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

*"ஐரோப்பிய ஒன்றியத்தின் நியாயமற்ற - பக்கச்சார்பான - தீர்மானத்தினால் ஒரு புறம் வேதனையும் மறுபுறம் சினமும் அடைந் திருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள், புலிகள் இயக்கத்துக்கும் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்படும் தேச சுதந்திரப் போராடத்துக்கும் மேலும் தீவிரமான ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் அள்ளி வழங்கி, இத்தடையின் உள்ளார்ந்த நோக்கத்தை முறியடிப்பார்கள் என்பது திண்ணம்."*

- என்று மதியுரைஞர் உரைத்திருப்பதை, தடை அறிவிப்பு வருவதற்கு சில மணி நேரங்கள் முன்னதாகவே பல்வேறு மேற்கு நாடுகளிலும் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற இடங்களிலும் தாம் நடத்திய உணர்வெழுச்சி நிகழ்வுகள் மூலம் புலம் பெயர் தமிழர்கள் நிரூபித்து - உறுதிப்படுத்தி - காட்டி விட்டார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு தலைப்பட்சமான - இலங்கை அரசுக்குப் பக்கச்சார்பான - இந்தத் தடை நடவடிக்கைக்கு, இராஜீக அழுத்தத்துக்கு, சரியான பெறுபேற்றை தமது கடும் போக்குச் செயற்பாடு மூலம் புலிகளும், அவர்களுக்கு பற்றுறுதியுடன் கூடிய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும், உதவிகளையும் வழங்குவதன் மூலம் புலம் பெயர்ந்த தமிழர்களும் தெளிவாக வெளிப்படுத்துவர் என்பது திண்ணம்.

# கொடிகாமம் - பருத்தித்துறை இடையிலான காலைநேர பஸ் சேவை குறித்து விசனம்

வடமராட்சி,ஜூன்2

தினமும் காலை வேளையில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கு நடத்தப்படும் பஸ்சேவை சீரில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தென்மராட்சியிருந்து வடமராட்சிக்கு கடமை நிமித்தம் வருகை தரும் ஊழியர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்வதுடன் தத்தமது சொந்த வாகனங்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

குடாநாட்டில் இயல்பு நிலை நிலவிய போது பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்துக்குச் செல்லும் கடைசி நேரபஸ் இரவு கொடிகாமம் பல நோ.கூ. சங்கத்தில் இரவு தரித்து நின்று காலையில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கான சேவையில் ஈடுபட்டு வந்தது.

இதனால் தென்மராட்சிப் பிரதேச அரச ஊழியர்கள் உரிய நேரத்துக்கு வடமராட்சி பிரதேசத்திலுள்ள அரச அலுவலகங்களுக்குச் சென்று வந்தனர்.

தற்போது இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் செல்லும் பஸ் இரவு நேரத்தில் கொடிகாமத்தில் தரிப்பதில்லை. அத்துடன் காலையில் கொடிகாமத்துக்கான பஸ் 6 மணிக்குப் பின்னரே பருத்தித்துறையிலிருந்து புறப்படுகிறது.

இதனால் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கான காலை நேரபஸ் சேவை தாமதமாகவே ஆரம்பமாகிறது.

இந்தத் தாமதத்தினால் தென்மராட்சி அரச ஊழியர்கள் வடமராட்சியிலுள்ள அரச அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் செல்லும் வாய்ப்பை இழந்து வருகின்றனர்.

இதேவேளை - கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை வேளைகளில் உரிய நேரத்தில் பஸ் புறப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண டிப்போவினால் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் கடைசிநேர பஸ் கொடிகாமத்தில் இரவு நேரம் தரித்து நின்று காலை வேளைகளில் யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்டு வருகிறது.

(70-173)

# நல்லெண்ணெயின் தரம் பற்றி ஆராய மாதிரி பரிசோதனைக்கு

## பண்டத்தரிப்பு பட்டினப்பகுதியில் நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்2

பண்டத்தரிப்பு பட்டின பகுதியிலுள்ள கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நல்லெண்ணெயின் தரம் பற்றியும் அவை சுத்தமானவை தானா? என்பது பற்றியும் பரிசோதனை செய்வதற்கென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மாதிரி நல்லெண்ணெய் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அன்று இந்தத் திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எடுத்துச்செல்லப்பட்ட மாதிரி நல்லெண்ணெய் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலுள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பரிசோதனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - பிரான்பற்று பகுதியில் நல்லெண்ணெய் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலுள்ள செக்குகளிலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அன்றைய தினம் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் என். நிர்மலானந்தன், சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.சதீஸ், வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக வருமான மேற்பார்வையாளர் எஸ். சந்திரகுமார் ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்படி பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(135)

# பருத்தித்துறைப் பிரதேசசபைக்கு 12 குப்பைத் தொட்டிகள்

வடமராட்சி,ஜூன்2

சர்வதேச 'கெயர்' நிறுவனம் பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குள் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிளாஸ்ரிக்கில் உருவாக்கப்பட்ட 12 குப்பைத் தொட்டிகளை வழங்கியுள்ளது.

இதில் நான்கு, மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் குப்பைகளை போடுவதற்காக வைக்கப்படவுள்ளதாகவும் -

ஏனையவை பொருத்தமான சூழ்நிலையில் - பொருத்தமான இடங்களில் வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் - பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சிதம்பரப்பிள்ளை பசுபதி தெரிவித்துள்ளார்.

(173)

# மாதகல் விவசாய சம்மேளனத்துக்கு 'கெயர்' நிறுவனத்தால் 'லான்ட்மாஸ்ரர்'

வலி.தென்மேற்கு,ஜூன்2

சர்வதேச 'கெயர்' நிறுவனம், மாதகல் விவசாயிகள் சம்மேளனத்திற்கு புதிய 'லான்ட் மாஸ்ரர்' ஒன்றை கடந்த வாரம் வழங்கியுள்ளது.

சுமார் 4 லட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த 'லான்ட் மாஸ்ரர்' கீரிமலை கமநல சேவை நிலையத்திற்கு ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

மாதகல் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் வி.சிற்றம்பலம் இதனைத் தெரிவித்தார்.

மாதகல் பகுதியிலுள்ள விவசாயிகளின் விவசாயத் தேவைகளுக்கு சகாய கட்டணத்தில் இந்த 'லான்ட் மாஸ்ரர்' வாடகைக்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(135)

# குருநகரில் இயங்கிவந்த அனைத்து மதுபான நிலையங்களுக்கும் மூடுவிழா

குருநகர்,ஜூன்2

குருநகர் பகுதியில் இயங்கி வந்த மது விற்பனை நிலையங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களால் இழுத்து மூடப்பட்டுள்ளன.

குருநகர் மத்திய மேற்கு வீதியில் ஒன்றும் குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தைப் பகுதியில் இரண்டுமாக மூன்று மதுபான விற்பனை நிலையங்கள் குருநகரில் இயங்கி வந்தன. அத்துடன், குடிவகையுடன் உணவு நிலையம் ஒன்றும் குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தைப் பகுதியில் இங்கிவந்தது.

மேற்படி மதுபான விற்பனை நிலையங்களால் குருநகர் பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் குடும்பஸ்தர்கள் சிலர், இலகுவில் மதுபாவனைக்கு பழக்கப்படுவதை உணர்ந்த குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு மற்றும் குருநகர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்ட மது விற்பனை நிலையங்களை மூடிவிடும்படி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

குருநகரில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடத்தப்பட்ட மகாஞான ஒடுக்கத்தின்போதும் குருநகரில் உள்ள மது விற்பனை நிலையங்களை மூடிவிடும்படி பேரணி நடத்தப்பட்டதுடன், யாழ்.அரச அதிபரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, குருநகர் பகுதியில இயங்கி வந்த சகல மது விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

எனினும் குருநகர் எல்லைப் பகுதிக்கு அப்பால் உள்ள வீடுகள் சிலவற்றில் மது விற்பனை தொடர்ந்து இடம் பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

(51)

# சம்பந்தரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு சமயப்போட்டிகள்

மானிப்பாய், ஜூன்2

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசைத்தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமயப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகள் நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முதலாம், இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் திருஞான சம்பந்தர் போல் ஆடையணிந்து சிவசின்னங்கள் அணிந்து அவர் பாடிய தேவாரங்கள் ஒன்றை தாளத்துடன் பாடிக்காட்ட வேண்டும்.

ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு திருஞான சம்பந்தர் தொடர்பான வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்படும்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கான பரிசில்கள் குருபூசைத் தினத்தன்று வழங்கப்படுமென அறநெறிப் பாடசாலை அதிபர் சமூக ஜோதி கா. கணேசதாசன் தெரிவித்துள்ளார்.

(90)

## நாளை

வைகாசி - 20
சனிக்கிழமை
03.06.2006
திதி : சப்தமி
பிற்பகல் : 04.05
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் : 05.19
சுபநேரம் : 02.52-04.22
ராகுகாலம் : 08.52-10.22

# நீர்வேலியில் பட்டப்பகலில் வீடுபுகுந்து நகைகள் திருட்டு

அச்சுவேலி, ஜூன்2

பட்டப்பகலில் வீட்டின் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் தங்க நகைகளை திருடிச்சென்றுள்ளனர்.

நீர்வேலி மத்தியில் உள்ள ஆசிரியையின் வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து நீர்வேலி மத்தியில் வசிக்கும் குறிப்பிட்ட ஆசிரியை சம்பவதினம் விடுமுறைக்கால விசேட வகுப்புக்கென பாடசாலை சென்றிருந்தார் என்றும் -

இந்த வேளையில் திருடர்கள் வீட்டின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்நுழைந்து தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(11)

## உதயவாக்கு

சொர்க்கம் தாயின் இரு பாதங்களுக்கும் அடியில் இருக்கிறது.
-நபிகள்நாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்.றோ.க, 1974 இல் பிறந்த, கௌரவ குடும்ப, பட்டதாரி (B.Sc.) ஆசிரியருக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். T.P. 0777110295 (50735)

### தவறிவிட்டது

யோசேப் சண்முகநாதன் யோகநாதன் என்பவருடைய காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பன 31.05.2006 யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இல.22 அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். T.P. 0776139198.(50740)

### தொடர் காற்றினால் முறிந்து வீழ்ந்த மரங்கள்

வலி.தென்மேற்கு மற்றும் வலி.மேற்கு பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக வரண்ட அனல்காற்று வீசி வருகிறது. இதனால் சில இடங்களில் பனை மரங்கள், தென்னை மரங்கள் என்பன முறிந்து சேதமடைந்துள்ளன.

அத்துடன் வாழைகளும் முறிந்து சேதமடைந்துள்ளன. நேற்றுமுன்தினம் பண்டத்தரிப்பு-சித்தன்கேணி பிரதான வீதியில் பனை மரம் ஒன்று காற்றின் காரணமாக முறிந்து பிரதான மின்சார கம்பி மேல் விழுந்ததால் அப்பகுதியில் குறிப்பிட்ட நேர மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. (135)

### பெயர் மாற்றம்

கிளிநொச்சி, ஜெயபுரம் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த வடிவேல் பூசைப்பாக்கியம் ஆகிய நான் 01.06.2006 முதல் எனது பெயரை **வடிவேல் தனுசா** என பெயர் மாற்றம் செய்துள்ளேன் எனவும் இனி வரும் காலங்களில் இப் பெயரையே பாவிப்பேன் எனவும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ஜெயபுரம் தெற்கு,
கிளிநொச்சி.
வடிவேல் தனுசா
(சி-49495)(21.15.17)


**Personal Classes**
364, Stanly Road Jaffna

தமிழ் - தர்மராஜா

G.A.Q., B.A-I,B.A
யாழ்ப்பாணம் - பேராதனை
அனைத்து பிரிவு வகுப்புகளும் வழமைபோல் நடைபெறுகின்றன.

G.A.Q., English Paper

அநேக 2008 மாணவர்களின் விருப்பத்திற்கான தமிழ் - 2008, பிரிவு I மட்டும்

அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

ENGLISH MAHESWARAN
(50709)

**BARATHY**
சித்தன்கேணி

வடமராட்சியின் மிக பிரபல்யம் பெற்ற பொருளியல் ஆசான் சித்தன்கேணி மண்ணில் என்றும்

பொருளியல்

திரு.சுதாகரன் B.Com.(HONS)
புதிய அலகுகள்

A/L 2008 -பொருளியல் அறிமுகம்
சனி-ஞாயிறு -9.30 a.m.

A/L 2007 -பணம், வங்கி, பொது விலைமட்டம்
சனி-ஞாயிறு -10.30 a.m.

ஆரம்பம் -03-06-2006 சனிக்கிழமை
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்
(50737)(26.15.17)

**BARATHY**
சித்தன்கேணி

A/L 2008

கலை, வர்த்தகப்பிரிவுகள்
புதிய பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| பொருளியல் சுதாகரன் | கணக்கீடு முகுந்தன் |
| வணிகக்கல்வி பசில் | அளவையியல் R.P.சர்மா |
| தமிழ் பாலா | இந்துநாகரிகம் சுரேஸ் |
| புவியியல் குமரன் | இந்துசமயம் தரன் |
| கிறிஸ்தவம் வசந்தன் | நாடக - அரங்கு சுதன் |
| அரசியல் சுகாஷ் | ஆங்கிலம் இராஜகுலசூரியர் |

குறிப்பு: சகல பாடங்களும் ஆரம்பமாகி நடைபெறுவதால் இதுவரை அனுமதிபெறாத மாணவர்கள் தாமதிக்காது உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும். (50737)(26.15.45)


# மனிதர்களுக்கு நல்ல பாடம் போதிக்கும் சிவபெருமானின் தெய்வீகக் காட்சிகள்

சோதிமயமானவன் இறைவன் என்று ஞானியர் கூறுவர். ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதி என்றும் சோதி, சுடர், ஒளி விளக்கு என்றும் கூறுவர் 'மணிவாசகர் இந்த உலகம், மண், நீர்,காற்று, நெருப்பு ஆகாயம் என்ற ஐம்பூதங்களால் ஆனது பரமேஸ்வரன் பஞ்சபூதங்களிலும் விரவி இருந்து பாலிக்கின்றார்.

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயம் திருவானைக்கா, காளத்தீஸ்வரர் ஆலயம், திருவண்ணாமலை சிதம்பரம் என்பன முறையே மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பனவற்றைக் குறிக்கும் பஞ்சபூதத் தலங்களாகும். திருவண்ணாமலை மலையே லிங்கமாகவும், மலையைச் சுற்றிய பகுதி

## ஞானக்கதிர்

திருக்கோயிலாகவும் அமைந்துள்ள மிக விசேஷ தலமாகும்.

இறைவன் திருமுறை சோதி வடிவில் காட்சியளித்துள்ளான். பிரம்மாவிற்கும் திருமாலுக்கும் ஏற்பட்ட போட்டியின் காரணமாக அவர்கள் மத்தியில் அரன் அனற்பிழம்பாக காட்சி அளித்தார்.

அத்துடன், கார்த்திகை மாதத் தீபத் திருநாளில் திருவண்ணாமலையில் இறைவன் சோதிப்பிழம்பாக காட்சியளிப்பார். இதனை ''அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் விண்ணோர் முடியின் வீற்ற றாற் போல்' என்று சோதியின் சோபையை விவரிக்கின்றார் மணிவாசகர்.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர் அணுவை ஆராய்ந்தார்கள். அணுவிற்கு அணுவாக இலத்திரனியலைக் கண்டுபிடித்தார்கள். இலத்திரனியல் ஆராய்ச்சியில் பச்சை நிறமான ஒருவட்டமும் அதன் நடுவே செந் நிறமான சோதி வடிவமும் இருப்பதைக் கண்டார்கள். பச்சை நிறமான வட்டம் தான் சிவலிங்கத்தின் ஆவுடையாகும். செந்நிறமான சோதிதான் சிவலிங்கத்தின் லிங்கமாகும்.

நமது தவசிரேட்டர்கள் தமது தவ வலிமையால் பரமசிவனின் அருள் வடிவான லிங்க வடிவைக்கண்டார்கள். 'உலகெங்கிலும் இருக்கின்ற அணுவிலும் லிங்க வடிவை கண்டதால் உலகெங்கும் இருக்கும் தெய்வம் சிவலிங்கம்' தான் என்பதை உணர்ந்ததினால் தான் சிவாலயம் அமைத்து சிவலிங்கத்தை பூசித்தார்கள்.

இதனால், தென்நாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை எனப்பட்டான். சிவபெருமானுடைய தெய்வீகக் காட்சி மனிதர்களுக்கு நல்ல பாடத்தைப் போதிக்கும் பொக்கிஷமாகும். கூத்தனின் கலைவடிவில் மேல் நாட்டார் கூட மயங்கி விடுகின்றனர்.

சிவபெருமான் ஜோதி லிங்கமாகத் தோன்றிய பன்னிரு திருத்தலங்கள் பின்வருமாறு இராமேஸ்வரம் - தமிழ் நாடு, ஸ்ரீசைலம் - ஆந்திரா, சோமநாதம்- குஜராத், விஸ்வநாதம்- காசி, திருக்கேதாரம் -இமயமலை அடிவாரம், உஜ்ஜயனி- மத்திய பிரதேசம், ஓம் காரம் - மத்திய பிரதேசம் , திரியம்பகம் -கோதாவரி உற்பத்தி கடம்,பீமசங் கரம்- பூனா, கிருஸ்ணேஸ்வரம் - எல்லோரா, வைத்தியநாதம் - மகாராஷ்டிரம், நாகேஸம்- மகாராஷ்டிரம்.

### பரமேஸ்வரி சிவராமலிங்கம்

ஆதி அந்தமில்லா இறைவனே ஜோதி மயமாகத் தோன்றி எமக்கு ஆறாத இன்பம் அருள்பவன். அவன் அடிக்கமலம் போற்றுவோம்.

சிவபெருமா னென்று நானழைத் தேத்தத்
தவபெருமானென்று தான்வந்து
நின்றான்
அவபெருமானெனை ஆளுடை நாதன்
பவபெருமானெனப் பணிந்து
நின்றேனே

- திருமந்திரம்.



மல்லாவி யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய பெருந்திருவிழா கடந்த மாதம் நடைபெற்றது. திருவிழாவின்போது தேரில் இறைவன் எழுந்தருளி இருப்பதையும், பக்தர்கள்தேர் இழுத்து வருவதையும் படத்தில் காணலாம். (படம்: மல்லாவிச் செய்தியாளர்)



யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிதாக அமைக் கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயத் திறப்புவிழா அண்மையில் நடை பெற்றது. நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நாடா வெட்டி தேவாலயத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (204)

## "உயர் குருதியமுக்கம்" குறித்த விரணம் ஞாயிறன்று இறுவட்டு வடிவில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஒன்றிணைந்து உயர் குருதியமுக்கம் என்ற விவரணத் தொகுப்பு இறுவட்டு ஒன்றை வெளியிடவுள்ளனர். இந்த இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மருத்துவபீட மாணவன் ச.கஜேந்திரன் தலைமையில் இந்த வெளியீட்டு விழா நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவும் சிறப்பு விருந்தினராக கியூமெடிக்கா நிறுவனத்தின் பணிப்பாளர் போதகர் சாம் இராஜசூரியரும் கலந்துகொள்வர்.

விருந்தினர் உரைகளைத் தொடர்ந்து இறுவட்டு வெளியீடு விவரணச் சித்திரம் ஒளி பரப்புதல் என்பன இடம்பெறும்.

காட்சி தொடர்பான விமர்சன உரையை உளவள ஆலோசகர் வைத்திய நிபுணர் எஸ். சிவமோகன் நிகழ்த்துவார்.

சிறப்பு பிரதிகளை வைத்திய நிபுணர்கள், மருத்தவ பீட விரிவுரையாளர்கள், கல்வியாளர்கள், பாடசாலை அதிபர்கள், வங்கி அதிகாரிகள், வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலரும் பெற்றுக்கொள்வர். (204)

## காக்கைதீவில் மீண்டும் மலக்கழிவு வீதியால் பயணிப்போருக்கு பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

காக்கைதீவு வெளியில் மீண்டும் மலக்கழிவுகளும் இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களின் கழிவுகளும் கொட்டப்படுகின்றன.

இதனால் காக்கைதீவு வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காக்கைதீவுப் பிரதேசத்தில் மலக்கழிவு கொட்டப்படுவதால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து கடந்த ஆண்டு தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளரினால் யாழ். அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆனால், தற்போது மீண்டும் காக்கைதீவு பிரதான வீதியின் இருமருங்கிலும் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு தினமும் கழிவுகள் குவிந்த வண்ணம் உள்ளன.இந்த நிலையில் - ஆனைக்கோட்டை விநாயகர் ச.ச. நிலையத் தலைவர் க. இராசேந்திரம், காக்கைதீவு குடியிருப்புப் பகுதித் தலைவர் இ.சிறி ஆகியோர் மேற்படி கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் -

இதனால் ஏற்படக்கூடிய நோய் அபாயம் குறித்தும் வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலனின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். (185)

## வாழ்த்துகின்றோம்



கட்டுவன் சந்தியைச் சேர்ந்த
யா/இராமநாதன் கல்லூரியின்
முன்னாள் இசை ஆசிரியை
**செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதர்**
அவர்களுக்கு கலாசார அமைச்சினால் கடந்த 22.05.2006 அன்று கொழும்பு ஜோன்டி சில்வா கலையரங்கில் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, மேலும் அவரது கலைச்சேவை தொடர வாழ்த்தி இறை ஆசி பெற வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:
மீசாலை மேற்கு அறநெறிப் பாடசாலை
சிவசக்தி சங்கீத நர்த்தனாலயம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், நண்பர்கள், உறவினர்கள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.
(சி-49493)(21.15.17)


## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் - யாழ்ப்பாணம்
கே.கே.எஸ்.றோட் இணுவில்
(இரு இடத்திலும்)

A/L 2008

மீண்டும் ஓர் புதிய பிரிவு
கலை, வர்த்தகப் பிரிவுகள்
சனி, ஞாயிறு மட்டும்

நாளை ஆரம்பம்:- 03-06-2006 சனிக்கிழமை
யாழ்.மண்ணின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினரால்

| A/L 2008 | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதரராஜன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P சர்மா | R.P. சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக - அரங். | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| சித்திரம் | செந்தில்நாதன் | செந்தில்நாதன் |
| ஆங்கிலம் | இராஜகுலசூரியர் | இராஜகுலசூரியர் |

இரு இடங்களிலும் நாளையில் இருந்து உங்கள் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவும்.
(50737) (21.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ காவல்துறை மற்றும் நீதித்துறை பணிகளை ஹென்றிக்சன் பார்வையிட்டார்

கிளிநொச்சி,ஜூன் 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறை மற்றும் நீதி, நிர்வாகத்துறைப் பணிகளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ நீதி, நிர்வாகத்துறைச் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது நீதி, நிர்வாகத்துறையின் செயற்பாடுகள் குறித்து நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பராவிடம் உல்ப் ஹென்றிக்சன் விரிவாகக் கேட்டறிந்தார். அதன் பின்னர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்தில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையிலான குழுவினரை அவர் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது தமிழீழக் காவல்துறையின் செயற்பாடுகள் குறித்து உல்ப் ஹென்றிக்சன் கேட்டறிந்தார்.

இச்சந்திப்புகளின் போது சமகால அரசியல் நிலைமைகள் குறித்தும் உல்ப் ஹென்றிக்சன் கலந்துரையாடினார்.



# நடைபயணமும் சைக்கிள் பவனியும்

பரந்தன்,ஜூன்2

வற்றாப்பளை மகாவித்தியால சாரணிய மாணவர்களின் 32 கிலோமீற்றர் நடைபயணமும் 60 கிலோமீற்றர் சைக்கிள் பவனியும் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலையில் இருந்து ஆரம்பமான நடைபயணமானது வற்றாப்பளை கேப்பாபுலவு வீதியால் புதுக்குடியிருப்பு சென்று அங்கிருந்து முல்லைத்தீவு - சிலாவத்தை வீதியால் வற்றாப்பளை வந்தடைந்தது.

நடைபயணத்தில் 41 மாணவர்களும் சைக்கிள் பயணத்தில் 11 மாணவர்களுமாக மொத்தம் 52 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

(352)

# முதன்மை வீரர்கள் தெரிவு

மல்லாவி,ஜூன்2

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் முதன்மை வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**11 வயதுப் பிரிவு**

*ஆண்* - ஆர்.கஜானன் (அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தி.), *பெண்* - ஆர்.மிதிலா (முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை).

**13 வயதுப் பிரிவு**

*ஆண்*- பி.பாஸ்கரன் (கொக்கிளாய், அ.த.க.பாடசாலை). *பெண்* - கே.சஜீவனா (முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை).

**15 வயதுப் பிரிவு**

*ஆண்* - எம்.அனோஜன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), *பெண்* - வி.டிலக்சனா (கலைமகள் வித்தி.).

**17 வயதுப் பிரிவு**

*ஆண்* - வி.கீதவன் (கற்சிலைமடு அ.த.க. பாடசாலை), *பெண்* - ரி.ஜனனி (கலைமகள் வித்தி.).

**19 வயதுப் பிரிவு**

*ஆண்* - ரி.ராகவன் (கலைமகள் வித்தி.), *பெண்* - என்.நிரோஜா (பாண்டியன்குளம் ம.வி.), எம்.தர்மிலா (பாரதி வித்தி.), என்.ராஜநந்தினி (கலைமகள் வித்தி.).

**21 வயதுப் பிரிவு**

*ஆண்* - எஸ்.நிரஞ்சன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), *பெண்* - வி.கிறிஸ்ரின் வினோ (முல்லைத்தீவு ம.வி.), எம்.ராதிகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

(322)

# காணிகள் துப்புரவு செய்யாமையால் குடியிருப்பாளர்கள் பெரும் அவதி

ஒட்டுசுட்டான், ஜூன்2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சில காணிகளில் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்படாமையால் காணிகளுக்கு அருகில் குடியிருப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடியிருப்புகளுக்கு அருகே இவ்வாறு பற்றைகள் மண்டிக் காணப்படுவதால் விஷஜந்துக்கள் குடியிருப்புகளுக்குள் புகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்விடயத்தைக் காணி உரிமையாளர்களும் பிரதேச சபையினரும் கவனத்திலெடுத்து இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(341)

# இரவில் கட்டாக்காலிக்கால்நடைகள் நடமாட்டம்; போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமம்

ஒட்டுசுட்டான், ஜூன் 2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலிக் கால்நடைகள் இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடுவதால் அவசர போக்குவரத்துகளில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கட்டாக்காலிக் கால்நடைகள் வீதிகளில் நடமாடுவதால் இரவில் போக்குவரத்து செய்வோர் விபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் தாமதமடைய வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

எனவே, கால்நடைகளை வளர்ப்போர் அவற்றைப் பட்டிகளில் அடைத்து போக்குவரத்தை இலகுவாக்க உதவவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போரின் கவனக்குறைவால் கால்நடைகள் இறக்கும் நிலையும் ஏற்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(341)

# முல்லை. பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

மல்லாவி, ஜூன்2

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற எல்லே, கபடி, சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

**எல்லே**

*ஆண்கள்*- மல்லாவி மத்திய கல்லூரி, கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

*பெண்கள்*- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம், பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

**கபடி**

*ஆண்கள்* - மல்லாவி மத்திய கல்லூரி, பாலிநகர் மகா வித்தியாலயம், இரணைப்பாலை றோக.த.க. பாடசாலை.

*பெண்கள்*- கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை, முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

**சதுரங்கம்**

*15 வயதுப்பிரிவு* - *ஆண்கள்* - புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, செம்மலை மகா வித்தியாலயம், அனிஞ்சியன்குளம் தமிழக்கலவன் வித்தியாலயம்.

*பெண்கள்*- செம்மலை மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, அனிஞ்சியன்குளம் தமிழ்கலவன் பாடசாலை.

*19 வயதுப்பிரிவு* - *ஆண்கள்*- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, செம்மலை மகா வித்தியாலயம், முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை.

*பெண்கள்* - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வல்லிபுனம் அ.த.க.பாடசாலை, முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

(322)

# சிறப்புற நடைபெற்ற புத்தகக் கண்காட்சி

விசுவமடு,ஜூன்2

விசுவமடு மாவீரர் படிப்பகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் நூல் விற்பனையும் அண்மையில் விசுவமடு மாவீரர் படிப்பகத்தில் தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கண்டாவளைப் பிரதேச உதவி அரச அதிபர் சத்தியசீலன் ஏற்றி வைக்கத் தமிழீழ தேசியக் கொடியைத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் பார்த்தீபன் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் பார்த்தீபன், கண்டாவளை உதவி அரச அதிபர் சத்தியசீலன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தயாரூபன், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன், ஆசிரியர் சரவணபவன் ஆகியோர் சிறப்புரைகள் வழங்கின.

(402)

# அறிவொளி கல்விக் கழகம் மாங்குளத்தில் திறந்து வைப்பு

பரந்தன்,ஜூன்2

மாங்குளம் பிரதேச மாணவர்களின் நலன் கருதி தச்சடம்பன் பகுதியில் வகுப்புகளை நடத்துவதற்கு அறிவொளி கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சிக்கழக நிர்வாகி வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி வளர்சிக்கழகப் பெயர்ப்பலகையைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் திரைநீக்கம் செய்துவைத்தார்.

மண்டபத்தைத் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இரண்டாவது நிலையத்தை முல்லை. மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் விமலேந்திரன் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை ஒலுமடு பாடசாலை அதிபர் சர்வேஸ்வரன், மாங்குளம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சரவணன் ஆகியோர் வழங்கினர்.

(352)

# சிறுவர் பொழுதுபோக்கு மண்டபத்துக்கு அடிக்கல்

பரந்தன்,ஜூன்2

கிளிநொச்சி மாவட்டத்தின் சேற்றுக்கண்டி, முரசுமோட்டையில் சிறுவர் பொழுதுபோக்கு மையத் திட்டத்திற்கான கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

தமிழர்புனர்வாழ்வு அனுசரணையில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் சேற்றுக்கண்டியில் வாழ்ந்துவரும் 5 வயது முதல் 18 வரையான சிறுவர்களின் எதிர்கால வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டே இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சி. சிதம்பரநாதன், ஊரக மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் த.நந்தகுமார் ஆகியோர் நாட்டினார். கட்டடத்திற்கான நிதி உதவியை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நலன் திட்ட நிறுவனம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(352)

# முழங்காவில் மகா வித்தியாலயத்தில் வைப்பகக் கிளை திறந்து வைப்பு

வெள்ளாங்குளம், ஜூன்2

முழங்காவில் மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவ, மாணவியரின் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ வைப்பகத்தினரால் வைப்பகக் கிளை ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தேசியக் கோடியை வைப்பகப் பணிப்பாளர் வி.சோழமறவன் ஏற்றி வைக்கப் பாடசாலைக் கொடியைப் பாடசாலை அதிபர் திருமதி கருணாகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வைப்பகத்தின் பெயர்ப்பலகையைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் திரைநீக்கம் செய்து வைக்க வைப்பகத்தைப் பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சேமிப்பு கணக்கில் 10 ஆயிரத்திற்கு மேல் வைப்புச் செய்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

864 மாணவ, மாணவிகள் இச்சேமிப்பு அலகில் புதிய கணக்குகளைத் திறந்துள்ளனர்.

இப்பாடசாலையில் கணக்கை ஆரம்பித்த மாணவ மாணவியருக்கான கையேடுகளை வைப்பகப் பொறுப்பாசிரியை மேகலாவிடம் வைப்பகப் பணிப்பாளர் சோழமறவன் கையளித்தார்.

(415)



# பொதுநூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

பரந்தன், ஜூன்2

கரைச்சிப் பிரதேச சபைப் பொது நூலகத்துக்கு நான்கு லட்சம் ரூபா பெறுமதியுடைய நூல்களும் நூலக உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

'யு.என்.ஹபிற்றற்' நிறுவன நகரத் திட்ட முகாமையாளர் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் வைத்து கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தனிடம் நூலக உபகரணங்களைக் கையளித்தார்.

இந்த நூல்கள் பிரதேச சபையின் ஸ்கந்தபுரம், முரசுமோட்டை ஆகிய நூலகங்களுக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(352-405)

# தண்ணீரூற்று - குமுழமுனை வீதி புனரமைக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஜூன்2

தண்ணீரூற்றுச் சந்தியிலிருந்து குமுழமுனை செல்லும் வீதி மிக நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யாது உள்ளமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழைகாலங்களின்போது சேதமான இவ்வீதி குண்டும்குழியுமாகப் பாவனை செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால், அவசர பிரயாணங்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

எனவே,உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

(341)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**வல்லிபுரம் யோகராசா**



தோற்றம்
28-12-1946

மறைவு
03-05-2006

குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வல்லிபுரம் யோகராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (03.06.2006) சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*ஐயனார் கோயிலடி,*
*கொடிகாமம்.* (50552)(32-11)

**தாய், மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.**

## தரிசனம் கிடைக்காதா....?



தரிசனம்
01
08
1914

அஸ்தமனம்
15
05
2005

**திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி**

திதி: வைகாசி வளர்பிறைச் ஸப்தமி
02-06-2006

சிவமாகிவிட்ட எம் கற்பக தருவே!
உங்கள் பத அஞ்சலி போற்றும்
பாக்கியம் பெற்றோமம்மா!
ஐயிரண்டு திங்கள் எமை அடைகாத்த
அன்புப் பெட்டகமே!
ஆறிரண்டு திங்களும் ஆனதேயம்மா!
தேறுதல் தர யாருமே இல்லையே!
காற்றாகி கனலாகி வேற்றாளாகப்
போனதென்னே?
ஆற்றாது ஆற்றாது இந்தத் துயர்
நீட்டுங்கள் தங்கள் அபயகரத்தை
தாருங்கள் மறு தரிசனத்தை.

**வழிமேல் விழிவைத்திருக்கும்**
**பிரியா இதயங்கள்.**

இணுவில் மேற்கு,
இணுவில்.
(50656) (24-32-11)

## நெஞ்சைவிட்டகலா ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
16 - 02 - 1977



விண்ணில்
27 - 05 - 2001

அமரர்
**பஞ்சரெத்தினம் ஜனார்த்தனன்**

திதி:ஷஷ்டி

**அன்புச் செல்வனே!**

ஒரு கூட்டுப் பறவைபோல் எம்மோடு வாழ்ந்த நீ கூட்டை விட்டுப் பறந்து சென்றதேன்? எமது தவம் குறைத் தவமா? சிறகொடிந்த பறவையாய் தவிக்கிறோம் நாம்.

தகவல்:
பஞ்சரெத்தினம் குடும்பம்,
3/3, பத்திரகாளி கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(50726)(26-32-11)

உன்னை எண்ணித் தவிக்கும் :
அன்பு அப்பா, அம்மா,
சகோதரிகள், மச்சான்மார்
மருமக்கள் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

**AIMS**
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES

புதிய பிரிவுகள் ஆரம்பம் 04-06-2006

**VB.net program**

ஆசிரியர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது
ஆசிரியர்களே உங்கள் விடுமுறைக் காலத்தைப் பயனுள்ளதாக்குங்கள்..
நன்கு திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட இக் கற்கைநெறி மூலம் நீங்கள் **Program Language** இல் பூரண அறிவைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**FOSS Education:**
**GNU/Linux Fundamental**

அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் பணி புரிபவர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களே! NGO மற்றும் பல்கலைக்கழகங்களில் அறிமுகமாக இருக்கும் GNU/Linux Operating System இல் நீங்கள் தேர்ச்சி பெற யாழ்.நகரில FOSS முன்னோடிகளிடமிருந்து முதன் முறையாக FOSS Education.

**15 Days Only**

மேலதிக விவரங்களுக்கு:
Drictor,
# 118,பலாலி வீதி ,தபாற்பெட்டி சந்தி ,திருநெல்வேலி

**Center for FOSS & LAMP**

## தீவக பாடசாலைகள் 12ஆம் திகதி ஆரம்பம்

மண்டைதீவு,ஜூன்2

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்பு காரணமாக இழக்கப்பட்ட பாடசாலை நாள்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஈடுசெய்யும் வகையில் பதில் பாடசாலையை நடத்துவற்கு தீவக வலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கவுள்ளபோதும் தீவகத்தில் 12ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வேலணையில் உள்ள தீவக வளநிலையத்தில் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் தலைமையில் நடை பெற்ற தீவக வலய அதிபர்கள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது. (88)

## பயிற்சிப் பட்டறை

உலக உணவுத் திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் அலுவலர்களுக்குவேலைக்கான உணவு வழங்கல் திட்டம் தொடர்பான பயிற்சிப் பட் டறை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறும். (117)

## மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஜூன்2

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 4, 5,9,10, 11 மற்றும் உயர்தரம் 2007 மாணவர்களையும் அந்த வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலையின் ஒட்லி மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (202)

* * *

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 5, 9, 10, 11 மாணவிகளையும் அந்த வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்குக் கூடுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (202)

## கிணறுகளின் விவரம் திரட்டப்படுகிறது

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கிணறுகளின் விவரம் பிரதேச செயலத்தினால் திரட்டப்படுகின்றது.

தனியார் கிணறு, பொதுக்கிணறு, விவசாயம், குடிதண்ணீர், குழாய்க்கிணறு, பவுஸர் மூலம் விநியோகத்துக்கு குடிதண்ணீர் எடுக்கும் கிணறுகள் ஆகியன தொடர்பான விவரங்கள் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## மனமார வாழ்த்துகின்றோம்



*37 வருடங்கள் அரச சேவையிலிருந்து இன்று 02.06.2006 ஓய்வுபெறும் எமது அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க இணைப்பாளர்*

**திரு. கனகரத்தினம் நவரட்ணராஜா**
**[தாதிய உத்தியோகத்தர் - சங்கானை வைத்தியசாலை]**

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*1994ஆம் ஆண்டு தொடக்கம் எமது சங்கத்தின் இணைப்பாளராகச் சேவை புரிகிறார். தாதிய உத்தியோகத்தரின் உரிமைகள், பொறுப்புகள், கௌரவம் மேலும் மேலும் பேணப்படுவதோடு, இவரின் சேவை தொடர்ந்தும் எமக்குத் தேவை.*

**செயலாளர்,**
**அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**
(50688)(32-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**பண்டாரம் கந்தையா**
(மாவிட்டபுரம்)



மலர்வு 01-09-1924
உதிர்வு 03-05-2006

அன்னாரின் 31ஆம் நாள் நினைவு தினத்தையொட்டி இன்று (02.06.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கதிர்காம கோயிலடி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (சி/49484)(32-11)

**பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
16.07.1967

உதிர்வு
19.04.2006

**அமரர் தம்பாப்பிள்ளை அம்பிகைபாகன்**
(சுதா பல்பொருள் வாணிப உரிமையாளர், கோண்டாவில்)

கடந்த 19.04.2006 அன்று அகால மரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியை அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நல் உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (502717)(32-11)

நீங்கா நினைவலைகளுடன்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் உள்ள மாவோ உறுப்பினர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும்

## இந்திய - நேபாள அரசுகளிடம் மாவோ தலைவர் வேண்டுகோள்

காத்மண்டு,ஜூன்2

''இந்தியா மற்றும் நேபாள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மாவோ இயக்க-தலைவர்களை விடுதலை செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று நேபாள மாவோ தீவிரவாத இயக்க தலைவர் பிரசந்தா கூறியுள்ளார்.

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தாக்குதல் சம்பவங்களை நடத்தி வந்தனர். மன்னர் ஆட்சியில் இந்த தாக்குதல்கள் அதிகரித்தன. தற்போது மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டு ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுள்ளதை மாவோ தீவிரவாதிகள் வரவேற்றுள்ளனர். மேலும், தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு தங்களது கோரிக்கைகள் குறித்து அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நேபாள மாவோ தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவரான பிரசந்தா, 'அன்னபூர்ணா போஸ்ட்' என்ற பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:

நேபாள அரசுடன் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையின் விளைவாக சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 700 மாவோ தீவிரவாதிகள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறப் போவதாகவும் நேபாள அரசு உறுதி அளித்துள்ளது. இது தவிர இந்தியா மற்றும் நேபாள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ள மாவோ அமைப்பு தலைவர்களையும் விரைவில் விடுதலை செய்யவேண்டும். இந்த பிரச்சினை குறித்து, இந்திய அரசுடன் ஒரு சில தினங்களில் முறைப்படி பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளதாக நேபாள அரசு தெரிவித்துள்ளது. இதனை நாங்கள் வரவேற்கிறோம். நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவுடன் எங்களது கோரிக்கை குறித்து முக்கிய பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறேன். இந்த பேச்சுவார்த்தைக்கு முன்னதாகவே எங்களது இயக்க தலைவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

நேபாளத்தில் பதவி ஏற்றுள்ள புதிய அரசு எங்களது கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளது. இதன் மூலம் எங்களின் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம். நேபாளத்தில் உள்ளாட்சி அமைப்புகளை உயிர்ப்பிக்கும் முயற்சியை எதிர்க்கிறோம். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரசுடனான பேச்சுவார்த்தை முறிந்து விடும். புதிய அரசிற்கு எதிராக தலைநகர் காத்மண்டுவிலும் பிற நகரங்களிலும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. மன்னர் ஆட்சிக்கு ஆதரவாக செயற்படுபவர்கள் இதுபோன்ற செயலில் ஈடுபட்டுள்ளனர். இந்த போராட்டம் அர்த்தமற்றது. நேபாள அரசு மாவோ அமைப்புடன் இணைந்து ஓர் இடைக்கால அரசை அமைக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் முடிவில் மக்கள் அளிக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வோம்.- என்றார்.

## 'தி டாவின்சி கோட்' படத்தை தமிழகத்தில் திரையிட தடை

'தி டாவின்சி கோட்' என்ற ஆங்கில திரைப்படத்தை திரையிடாமல் நிறுத்தி வைக்கும்படி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் சென்னை மாநகர பொலீஸ் அதிகாரி ஆகியோருக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 'தி டாவின்சி கோட்' என்ற ஆங்கில திரைப்படம் வெளியிடப்பட இருப்பது தொடர்பாக சிறுபான்மை சமுதாயத்தினரிடம் இருந்து பல்வேறு முறையீடுகளும், புகார்களும் அரசின் கவனத்திற்கு வந்தன. இப்படம் திரையிடப்பட்டால் கிறிஸ்தவ சமுதாய மக்களின் உணர்வுகளையும், மதச் சிந்தனைகளையும் புண்படுத்தக்கூடும். மேலும், இப்படம் திரையிடப்படுவதன் மூலம் தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களும், அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலைகளும் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு சூழ்நிலைகளை பரிசீலனை செய்து 1952ஆம் ஆண்டு (மத்திய சட்டம் 37, 1952ஆம் ஆண்டு) திரைப்படங்கள் சட்டத்தின் 13ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் எடுத்து மேற்படி திரைப்படம் திரையிடப்படுவதை நிறுத்தி வைக்க அனைத்து மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் சென்னை மாநகர பொலீஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு தமிழக அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.



சுவிஸ்-இத்தாலி இடையேயான நெடுஞ்சாலை ஒன்றில் பெரிய கற்பாறை ஒன்று சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்துத் தடைப்பட்டது. வீதியில் கார் ஒன்றின் மேல் கற்பாறை வீழ்ந்துள்ளதைப் படத்தில் காணலாம்.

## உலகில் இருபது லட்சம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி.

வாழ்க்கையைப் பறிக்கும் கொடிய நோயான எய்ட்ஸ், குழந்தைகளைப் பயமுறுத்துவது அதிகரித்துள்ளது. உலகில் மொத்தம் 20 லட்சம் குழந்தைகளுக்கு எய்ட்ஸ் அறிகுறியான எச்.ஐ.வி. கிருமி பாதிப்பு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஆரம்பித்த எய்ட்ஸ் நோய், இப்போது பெரியவர்களை மட்டுமின்றி, குழந்தைகளையும் பீடிக்க ஆரம்பித்துள்ளது. இப்போது 20 லட்சம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. அறிகுறிகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான குழந்தைகள், ஆபிரிக்க நாடுகளில் உள்ளன என்ற வேதனையான தகவலையும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் உலக குழந்தைகள் நல அமைப்பான 'குளோபல் மூவ்மென்ட் பார் சில்ட்ரன்ஸ்' என்ற அமைப்பு சமீபத்தில் ஆராய்ந்ததில், 'உலகில் பல நாடுகளிலும் எய்ட்ஸ் பாதிப்பு உள்ளது. அதிலும், குழந்தைகளுக்கு எய்ட்ஸ் அறிகுறி இருப்பது இப்போதுதான் கணிசமாக உயர்ந்துள்ளது. மற்ற நாடுகளை விட, ஆபிரிக்க நாடுகளில்தான் அதிக அளவில் குழந்தைகளுக்கு எய்ட்ஸ் அறிகுறி உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது' என்று கூறியுள்ளது.

இதன் தலைவர் டீன் ஹிர்ஷ்ச் கூறுகையில், 'குழந்தைகள் விஷயத்தில் நாம் போதிய அக்கறை காட்டவில்லையோ என்று தோன்றுகிறது. பல நாடுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், ஆபிரிக்க நாடுகளில் போதிய நடவடிக்கைகள் இல்லை. இதனால் தான் குழந்தைகளுக்கு அதிக அளவில் எய்ட்ஸ் அறிகுறி இருப்பது தெரியவந்துள்ளது. - என்றார்.

## மகாராஷ்டிராவில் மழை: ரயில் போக்குவரத்து பாதிப்பு

மகாராஷ்டிராவில் பெய்த மழையில் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். மேலும், 17 பேர் படுகாயம் அடைந்தனர். மழையால் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் தென் மேற்கு பருவ மழை துவங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் மும்பையில் உள்ள 'கேட் வே ஒவ் இந்தியா' பகுதியில் மழை வெள்ளத்தில் இருவர் அடித்துச் செல்லப்பட்டனர். இதில் ஒருவர் மீட்கப்பட்டார். மற்றொரு நபரை தேடும் பணி நடந்து வருகிறது.

மழையினால் நகரின் பல்வேறு பகுதிகளில் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன. மலாடு பகுதியில் சுவர் இடிந்து வீழ்ந்து 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

## முக்கிய குற்றவாளிகளின் பட்டியல் இந்தியா - பாக். இடையே பரிமாற்றம்

இஸ்லாமாபாத்,ஜூன்2

தாவூத் இப்ராகிம் உட்பட இந்தியாவில் தேடப்படும் 38 முக்கிய குற்றவாளிகளின் பட்டியலை மத்திய உள்துறை செயலர் துகால், பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நல்லுறவை மேம்படுத்தும் வகையில் பஸ் போக்குவரத்து உட்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, இந்தியாவால் தேடப்படும் 38 முக்கிய குற்றவாளிகளின் பட்டியலை மத்திய உள்துறை செயலர் பி.கே. துகால், பாகிஸ்தான் உள்துறை செயலர் சயீது கமால் ஷாவிடம் ஒப்படைத்தார். இந்த பட்டியலில், மும்பை தொடர் குண்டு வெடிப்பு தாக்குதலில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி தாவூத் இப்ராகீம், லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத கும்பலின் தலைவன் ஹபீஸ் சயீது, ஜெய்ஸ்-இ-முகமது தீவிரவாத இயக்க தலைவனும், இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை காந்தகாருக்கு கடத்திச் சென்ற சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியுமான மவுலானா மசூத் அசார் உட்பட 38 குற்றவாளிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இதுபோல், பாகிஸ்தானால் தேடப்பட்டு இந்தியாவில் தலைமறைவாக இருக்கும் 58 குற்றவாளிகளின் பட்டியல், இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த பட்டியலில் பயங்கர குற்றவாளியான ஜாவேத் லங்ராவின் பெயரும் இடம்பெற்றுள்ளது. இரண்டு நாட்டு அதிகாரிகளுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையின்போது, காஷ்மீர் பிரச்சினையில் தொடர்புடைய நாடு கடத்தப்பட்ட குற்றவாளிகளைப் பரஸ்பரம் ஒப்படைப்பது குறித்து பேசப்பட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் கூறும்போது, ''பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக இந்தியா குற்றம் சாட்டி வருகிறது. இந்தக் குற்றச்சாட்டை புறக்கணிக்கிறோம். தீவிரவாதிகளின் செயல்பாடுகளால் பாகிஸ்தான் கடுமையான பாதிப்பிற்கு ஆளாகியுள்ளது. சில முன்னணி நாடுகள் பாகிஸ்தான் மீது தீவிரவாதத்தை தூண்டிவிட்டு வருகின்றன. ஆப்கானில் செயற்படும் இந்திய தூதரகம் மூலம், பலுகிஸ்தான் மகாணத்தில் தீவிரவாதம் ஊக்குவிக்கப்படுகிறது,' என்றனர். பாகிஸ்தானின் இந்த குற்றச்சாட்டை இந்திய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

## அமைதி காப்புப் படையினருக்கு ஐ.நா.பொதுச் செயலர் புகழாரம்

பல்வேறு உலகநாடுகளில் இக்கட்டான சூழ்நிலைகளில் பணியாற்றிவரும் அமைதி காப்புப் படையினரின் சேவை பாராட்டுக்குரியது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் புகழாரம் சூட்டியுள்ளார்.

அமைதி காப்புப் படையினர் தினத்தையொட்டி கடந்த செவ்வாய்கிழமை நியூயோர்க்கில் அவர் விடுத்த செய்தியில் இப்பாராட்டைத் அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் 46 நாடுகளைச் சேர்ந்த அமைதி காப்புப் படையினர் பல்வேறு அமைதிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மனித உரிமைகளைக் காப்பது, பொதுத் தேர்தல்களை அமைதியாக நடத்தி முடிக்க உதவுவது, கண்ணி வெடிகளை அகற்ற உதவுவது, சொந்த இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறியவர்களை இருப்பிடம் திரும்ப வழிவகைசெய்வது உள்ளிட்ட முக்கிய பணிகளில் அமைதி காப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பணியில் ஈடுபட்ட 124 பேர் பலியாகிவிட்டனர். இவர்களில் 5 இந்தியர்களும் அடங்குவர். அவர்கள் அனைவருக்கும் ஐ.நா. தலைமைச் செயலகத்தில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் புகழாரம் சூட்டப்பட்டது.

அமைதிகாப்புப் பணியில் உயிரிழந்த வீரர்களின் சேவையைப் பாராட்டி இறப்புக்குப் பின் வழங்கப்படும் விருதுகளை அவர்களுடைய உறவினர்களிடம் கோபி அனான் வழங்கினார்.

உலகில் பதற்றத்தைத் தணித்து ஸ்திரத்தன்மையை உருவாக்கும் முயற்சியில் அமைதி காப்புப் படையினர் மேற்கொண்டு வரும் பணி குறிப்பிடத்தக்கது என்றார் கோபி அனான்.

## பூகம்பத்தில் உயிர் தப்பிய மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் தீவிரம்

இந்தோனேஷியாவில் பூகம்பத்தில் உயிர் தப்பிய மக்களுக்கு தொற்று நோய் தடுப்புமருந்துகள் அளிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அதே நேரத்தில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் தொலை தூர மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். கூட்ட நெரிசலை தவிர்க்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் ஜாவா மாகாணத்தில் உள்ள யோக்யகர்த்தா மற்றும் அதன் சுற்றுப்புற நகரங்களில் கடந்த 27 ஆம் திகதி நேர்ந்த பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாயிரத்து 846 ஆக உயர்ந்துள்ளது. ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.

அவர்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, உணவு மற்றும் மருந்து பொருள்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

யோக்யகர்த்தா அருகில் உள்ள பந்துல் நகரம்தான் பூகம்பத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குதான் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இதன் அருகில் உள்ள பல கிராமங்கள் அடியோடு நாசமடைந்து விட்டன. கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலைத் தாக்கத்துக்குப் பிறகு, அவசர நேரத்தில் எப்படி செயற்படவேண்டும் என்பதை இந்தோனேசிய அரசு தெரிந்துகொண்டு விட்டதாக ஆசிய மேம்பாட்டு வங்கித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் இந்தோனேசியாவுக்கு, மருந்து பொருள்கள், போர்வைகள், தற்காலிக கூடாரம் அமைக்க தேவைப்படும் பொருள்கள் ஆகியவற்றை அனுப்பி வருகின்றன. மீட்புப் பணியில் ஈடுபடவும் ஆள்கள் அனுப்பப்பட்டுள்ளனர். பந்துல் நகரத்தைச் சேர்ந்த சில கிராமங்களில் நிவாரணப் பொருள்கள் இன்னும் வந்து சேரவில்லை என மக்கள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளைத் தடைசெய்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் சாதிக்கப்போவது என்ன?

அமெரிக்க வல்லாண்மைக்கு அடிபணிந்து ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதனால் தமிழர் விடுதலைப் பயணத்தைத் தடைசெய்யலாம் அல்லது முறியடிக்கலாம் என்று கருதுமாயின் அவர்கள் தம் கனவுலகில் வாழ்வதற்கு நாம் தடையில்லை.

எந்தவொரு நாட்டின் விடுதலையும் கேட்கக் கிடைக்கின்ற பொருளாக விளங்கியதில்லை. ''சுதந்திரம் என்பது சுக்கா மிளகா சும்மா கிடைப்பதற்கு'' என்று அன்று பா வேந்தன் பாரதிதாசன் விடுத்த வினா எம் நினைவிற்கு வருகிறது. எங்கள் தமிழீழ விடுதலையை எந்தச் சிங்கள அரசும் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை. மாறாக, நாம் எம் விடுதலையைப் பெறுவது என்பது மிக வில்லங்கமான காரியந்தான்.

நாம் எதிர்க்காவிட்டால் அழிந்தே போய் விடுவோம். எதிர்த்தும் அழியக்கூடும். ''முற்றிய புற்றுநோயாளியை அறுவை செய்து காப்பாற்ற முயல்வது போல் தமிழினத்தைப் பீடித்துள்ள இந்த அரசியல் புற்றுநோயை அகற்ற எம் இனத்தை மீட்க நாம் களத்தில் குதித்துள்ளோம்'' என்று அன்று தந்தை செல்வா கூறிய கூற்றுச் சரி.

'என்னிலையிலும் சிங்கள இனமோ, சிங்கள ஆட்சிப்பீடமோ எமது உரிமையை நாம் கேட்கத் தரப்போவதில்லை. இனத்திட் - அற வழிப்போராட்டம் எடுபடாது. எனவே தான், ஆயுதம் தாங்கி எம் இனத்தைக் காப்பாற்ற நாம் களத்தில் குதித்துள்ளோம்'' என்று எம் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியுள்ள கருத்து வரலாற்றில் பதியப்பட்ட வேண்டிய வைரம் வாய்ந்த வரிகள்.

25 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் சிங்கள அரசின் பயங்கரவாதத்தை மருந்தளவும் கவனத்தில் கொள்ளாது அரச பயங்கரவாத அட்டகாசத்தை நியாயப்படுத்த முயல்வது எம் இனம் எல்லா மட்டத்திலும் பூண்டோடு அழிக்கப்படுவதற்குத் துணை நிற்கின்றது.

அரசின் அட்டகாசத்தைப் பற்றி எத்தகைய கேள்வியையும் கேட்காத ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளோடு சீண்டுவதிலும் எம்மைச் சீற்றம் கொள்ளச் செய்வதிலும் தனி இன்பம் காண்கிறது. இதனையொட்டி சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தேவையற்றுக் குற்றம் காண முயன்றதைக் கண்டித்து நான் விடுத்த அறிக்கை 'டெய்லிமிரர்' உட்பட ஏனைய தமிழ் ஊடகங்களின் முதன்மை பெற்ற அறிக்கையாக வெளிவந்தது.

நவாலித் தேவாலயம் உட்பட மற்றைய வழிபாட்டு நிலையங்களிலும் வழிபடச் சென்ற பக்தர்கள், குழந்தைகள் கோயிலின் உள்ளேயே குண்டுவீசிப் பொசுக்கப்பட்டதை நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். மறைந்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கிறிஸ்தவராய் இருந்தபோதும் தம் முன்னோரின் மானிப்பாய் மண்ணில் நவாலியூர் தேவாலயத்தில் நடந்த கொடுமைகளை மூடி மறைக்க முனைந்ததையும் அவ்வறிக்கையில் நாம் சுட்டிக்காட்டியுள்ளளோம்.

**புலம்பெயர்ந்த தமிழரின் ஓங்கி ஒலித்த ஆதரவுக் குரல்**

15 நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உரிமைக்குரல் நிகழ்வு தாயகத்தின் அவலங்களை எடுத்துக்காட்டிய போதும் இத்தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

15 நாடுகளில் மட்டுமல்ல, இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை அந்நாட்டு அரசு நிறுத்த வேண்டும் என்றும் -

இதற்காக அமெரிக்க அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் அமெரிக்காவில் உள்ள 15 தமிழ் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அவையாவன: வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ்ச்சங்கம் - கலிபோர்னியா, இலங்கைத் தமிழ்ச் சங்கம் - புளோரிடா, இலங்கைத் தமிழ்ச்சங்கம் - ஹஸ்டன், டெக்ஸாஸ், ஒபியோ, தமிழ் அமைப்பு - ஒகியோ, தமிழ் அகதிகள் மறுவாழ்வு - கலிபோர்னியா, அமெரிக்க தமிழ் அமைப்பு - தமிழர் நல்வாழ்வு மற்றும் மனித உரிமைகள் குழு - கொலம்பியா, உலகத் தமிழர் அமைப்பு - இல்லினாய்ஸ், உலகத் தமிழ் பெண்கள் அமைப்பு, உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புகள் ஓங்கி ஒலித்த போதும் ஐரோப்பிய ஒன்றியம் செவி சாய்க்க மறுத்திருப்பது செவிடன் காதில் சங்கு ஊதிய நிகழ்ச்சியாகவே உருவெடுத்துள்ளது.

தமிழனை நிந்தனை செய்யும் மஹிந்த சிந்தனையைத் தந்துள்ள எம் குடியரசுத் தலைவர் மஹிந்த அவர்கள்தான் குடியரசுத் தலைவராய் இருப்பதனால் எத்தகைய குதர்க்க வாதமும் பேசலாம் என்று கருதி விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதன் வாயிலாகத்தான் அவர்களை வழிக்குக் கொண்டுவரலாம் பேச்சுக்களில் கலந்து கொள்ளச் செய்யலாம் என ''ஒரு பெரிய கண்டுபிடிப்பைக்'' கண்டுபிடித்ததாகக் கொக்கரிக்கிறார்கள்.

**இலங்கை அரசுக்குக் கிடைக்கப்போவது என்ன?**

நாம் குடியரசுத் தலைவரைக் கேட்கும் ஒரே கேள்வி தடைசெய்யப்படும் இயக்கத்துடன் நீங்கள் நடத்துகின்ற பேச்சு வெற்றியளிப்பினும் அது சட்டவலுப் பெற்ற ஒப்பந்தமாகக் கொள்வதற்குச் சட்டத்தில் இடமுண்டா என்று நாம் கேட்க விரும்புகின்றோம். மஹிந்த சிந்தனைக்கு ஒத்து ஓதும் வெறிகொண்ட சிங்களக் கும்பலிடம் நாம் விடுக்கின்ற வினா இதுதான். இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கியதற்கு அடிப்படைக் காரணமே விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குச் சட்ட அடிப்படையில் ஒப்புதல் வழங்கினால்தான் நாம் பேச்சுக்கு வருவோம் என விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை ஏற்றுத்தானே விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை இலங்கை அரசால் நீக்கப்பட்டது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது எல்லை மீறிய அச்சம் காரணமாகத் தடை விதிக்க அஞ்சி மற்றைய நாடுகளைக் கொண்டு குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் துணையோடு தடைவிதிப்பதனால் இலங்கை அரசு ஈட்டப்போகின்ற வெற்றி என்ன? இதுவரை உலகை ஏமாற்றிய சிங்கள அரசு தம்மைத் தாமே ஏமாற்றுவதில் தாங்கொணா மகிழ்ச்சி அடைகின்றது. அவர்களின் உச்சக்கட்ட அறியாமை வாழ்க என வாழ்த்துகின்றோம். அறியாமை நிறைந்துள்ள இடத்தில் நாம் அறிவுரை கூற முயல்வது எம்மையே அறிவிலிகள் ஆக்கிவிடும்.

கருணா குழுவினரை, ஈ.பி.டி.பியிரை அரசு கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்று இலங்கைக்கு உதவி வழங்கவிருக்கும் இணைத்தலைமை நாடுகள் எடுத்துரைத்துள்ளன. ஒட்டுப்படைகளை அகற்றுவதற்கு ஸ்ரீலங்கா அரசு இசைதல் வேண்டும் என்பது தான் சென்ற பெப்ரவரி 22இல் நடைபெற்ற ஜெனீவா மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு. இந்த ஒட்டுப்படை அகற்றப்பட்ட நிலையில்தான் சென்ற ஏப்ரல் 19ஆம் திகதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள படைமுகாம்களை அகற்றல், மக்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரச் செய்தல் போன்றவை ஆராயப்படவிருந்தன.

ஆனால், பெப்ரவரி 22 தொடங்கி ஏப்ரல் 7ஆம் திகதிவரை விடுதலைப் புலிகள் எத்தகைய தாக்குதல்களையும் நடத்தவில்லை. மாறாக, நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்ற உண்மையாக உழைத்தது. ஆனால் பெப்ரவரி 7ஆம் திகதி தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவிருந்த திருமலைத் தமிழர் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் தான் பணிபுரிந்த இலங்கை வங்கியின் வாயிலில் - உயர் பாதுகாப்பு வலயத்தில் ஈவிரக்கமற்ற நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்துத்தான் திருமலை எரிமலையாகியது.

தமிழீழம் கொந்தளித்தது. நாடு எங்கனும் அல்லோல கல்லோல நிலைக்கு ஆளாகியது - ''படைத்தலைமையகம் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்தே, அதற்கு எதிர் நடவடிக்கையாக திருமலை மீது வான் தாக்குதல்களை நடத்த நான் உத்தரவு பிறப்பித்துள்ளேன் என்று பொறுப்பற்ற முறையில் குடியரசுத் தலைவர் - மன்னிக்கவும் கொடிய அரசின் தலைவர் கட்டளை பிறப்பித்ததன் விளைவுதான் இன்று நாடு இரத்தக் களரியில் மூழ்கியுள்ளது.

**மா.க.ஈழவேந்தன்**

எதிலும், பொறுமை காக்கும் பொறுமையின் பிறப்பிடமாகவும் வீரத்தின் விளைநிலமாகவும் விளங்குகின்ற விடுதலைப் புலிகள் மீது வீண்பழியைச் சுமத்தி விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்க உலக நாடுகளும் சிங்கள அரசும் எவரும் விரும்பாத விளைவுகள் இத்தீவில் ஏற்பட போகின்றன.

இவ்விளைவிற்கு ஐரோப்பிய ஒன்றியமும் ஸ்ரீலங்கா அரசுமே பொறுப்பேற்க வேண்டும். கடும்போக்காளர்களை உயர் பதவிகளுக்கு நியமித்துள்ள குடியரசுத் தலைவர் கடும் போக்காளர்களின் போக்கிற்குத் தான் பொறுப்பில்லை என அவர் தட்டிக்கழிப்பாராயின் உலகம் அவர் போக்கைக் கண்டு எள்ளி நகையாடுவது உறுதி. ✱

---


யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639-12.05.1976

**முக்கிய அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர் பட்டியல்கள் 2006.06.02ஆம் திகதியிலிருந்து 2006.06.09ஆம் திகதி வரையுள்ள 08 நாள்களுக்குக் கிளைகளிலும் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாக்காளர் பட்டியல் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் உறுப்பினர்கள் 16.06.2006ஆம் திகதிக்குப் பிந்தாது மேற்படி சங்கப் பணிமனைக்கு எழுத்து மூலம் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவோ வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்களாவர் (முழுத் தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்திசெய்தவரும் ஒரு முழுப் பங்கு ரூபா 100/- ஐச் செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்).

கிளைப் பொதுச் சபைக்கான கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

01.06.2006 (சி/49496) (24-11) - செயலாளர்.



**மரண அறிவித்தல்**

**சாமுவேல் பெனடிக்ற்**

(இளைப்பாறிய ஆசிரியர்)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் பெனடிக்ற் அவர்கள் 27-05-2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை சாமுவேல் - செசிலியா நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தெரோசா பிரான்சிஸ், இம்மானுவேல் யோசப், மேரிறோஸ் பிளசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும் விமலச்சந்திரனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03-06-2006) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பண்டத்தரிப்பு அந்தோனியார் கோயிலில் திருப்பலியின் பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜசிந்தா லொட்ஜ்,
சென்.அன்ரனீஸ் லேன்,
பண்டத்தரிப்பு.

(50743)(26-11-17-24)

தகவல்:
பிறேமாவதி (மனைவி),
விமலச்சந்திரன் (மகன்).



**IIS**

A/L பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்
விரைவில் ஆரம்பம்

விபரம் 07.06.2006 உதயனில்

இயக்குநர் IIS
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831


**கேள்வி அறிவித்தல்**

**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளரினால் மாவட்டச் செயலகத்தில் கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கேள்விதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய ஆவணங்களை இச்செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நேரங்களில் 01.06.2006 இருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளுக்கான முடிவுதிகதி 23.06.2006 பிற்பகல் 2 மணியாகும். அன்று பிற்பகல் 3 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் 22.06.2006 பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும். கேள்வி பற்றிய சகல விவரங்களையும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும்போது பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | ஆகக் குறைந்த தரம் (ICTAD) | வேலை விவரம் | மீளளிப்புச் செய்யமுடியாத தொகை (Rs.) | மீளளிப்புச் செய்யக்கூடியக் வைப்புத் தொகை (Rs.) |
|---|---|---|---|---|
| 01. | M 6 | அரச அதிபரின் வாசஸ்தலம் இருமாடிக் கட்டடம் அமைத்தல். யாழ்ப்பாணம் கச்சேரி Construction of two story Building (Residence) Old Park Kachcheri, Jaffna. | 1000 | 50,000 |
| 02. | M7 | மாநாட்டு மண்டபம் புதுப்பித்தல் யாழ்ப்பாணம் கச்சேரி Renovation of conference Hall at Jaffna Kachcheri, Jaffna. | 1000 | 40,000 |

*மாவட்டக் கேள்விச் சபை,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*30.05.2006.*

**க.கணேஷ்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
தலைவர்.
(சி/49499)(24-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

### களஞ்சியப் பொறுப்பாளர்

களஞ்சியத்தை பொறுப்பேற்று நடத்துவதற்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியலுடன் சித்தியடைந்த களஞ்சிய நிர்வாகத்தில் அனுபவமுள்ளவர்கள் சுயவிவரத்துடன் 07.06.2006இற்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதன் சுற்றாடலில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. வயது 30 இற்கு மேல்.

**உதயன் மனிதவள சேவை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/49498)(32)





தொடர் இல. **1714**

**31.05.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்**

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**01 52 60 62 (08)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. **201192457** இலிருந்து **201207019**
சுப்பர்-ஜக்பொட் பரிசு ரூபா **95,25,600/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 95,25,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 387 | 1,000/- | 3,87,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,220 | 500/- | 6,10,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 18,551 | 40/- | 7,42,040/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 17,634 | 20/- | 3,52,680/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,63,845 | 10/- | 26,38,450/- |
| மொத்தம் | | | 68,35,170/- |
| தங்க நகைகள், [illegible] | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெளிப்படுத்தப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,01,665 | | 74,35,170/- |

**இந்த சனிக்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,02,30,600/-**

| | |
|---|---|
| அனுராதபுரம் | 201204512-6-60 |
| குருநாகல | 201200556-7-51 |
| மாத்தளை | 201195603-8-49 |
| இரத்தினபுரி | 201194057-9-25 |
| புத்தளம் | 201206050-8-17 |



அபிவிருத்தி லொத்தர் சபை


# சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

## மாகாண சுகாதார அமைச்சு அனுப்பிவைப்பு

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றி நேர்முகப் பரீட்சை மூலம் சுத்திகரிப்புத் தொழிலாளிகளாக தெரிவுசெய்யப்பட்டு நியமனம் பெற்றவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை நிரந்தர நியமனக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை ஊடாக இவ்வாரம் இந்த நிரந்தர நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பதவி நிரந்தரமானது என்றும் - அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் மூலம் வைத்திய பரிசோதனை செய்வித்துக்கொள்ள வேண்டும் என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கேற்ற தேகாரோக்கியம் உடையவர் என்று சான்றுப்படுத்தப்பட்டாலன்றி இந்த நியமனம் செல்லுபடியாகாது என்றும் - இந்த நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (135)

# சாந்திகத்தின் ஏற்பாட்டில் யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

மனித உடல் உள, சமூக ஆரோக்கியத்தையும் ஆன்மீகத்தையும் மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை 'சாந்திகம்' அமைப்பு வழங்கவுள்ளது.

பயிற்சி வகுப்பில் ஆரம்ப யோகம், சுவாசம், உடலைத் தளர்த்துதல், தியானம், சக்தியை பரவவிடும், பவர் யோக, ஹட யோக போன்ற பயிற்சிகள் வழங்கப்படும்.

இதில் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புவோர் 'சாந்திகம்', 8/1 கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.


**புதிய உயர் பட்டப்படிப்புக் கல்லூரி**
**D.C.S. யாழ்ப்பாணம்**

G.A.Q., B.A. I,II .யாழ்., பேராதனை
**விரிவுரைகள்**
B.A. Final, G.A.Q. துரித மீட்டல்
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
03.06.2006 சனி காலை 8 மணி (50756)

**நாவலர் இன்ஸ் ரியூட்**
ஆனைப்பந்தி- பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.



- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் பயிற்சி வகுப்புகள்
- **B.A. Final** (யாழ்.)
- **G.A.Q.**துரித மீட்டல்(யாழ்.)
- விசேட ஆங்கில வகுப்புகள்
- **A/L 2007 Paper Class**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 03.06.2006 3P.M. (50757)

**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.



**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜக்சன்னின்
**கிங் - கொங் King Kong**
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30


### சான்றிதழ்களை பெற்றுக்கொள்க

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் நடத்தப்பட்ட பனை தென்னை வள தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்குரிய சான்றிதழ்களை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழகத்தின் அனுமதிகள் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்என யாழ்.பல்கலைக் கழகப் பதிவாளர் பி. கந்தசாமி அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் மேரிறெஜீனா



ஆனைக்கோட்டை, பிடாரி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் மேரிறெஜீனா (அழகம்மா) அவர்கள் 31-05-2006 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை இராசாத்தியம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்வரட்ணம், யோகம்மா, யேசுரட்ணம் (டென்மார்க்), யோகராசா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திலகன் (லண்டன்), சோபா (கொழும்பு), நெவின்ஸ்ராஜ் (லண்டன்),றொபின்ஸ்ராஜ் (லண்டன்), சிவா(லண்டன்), தர்சினி, யோவதி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் ராஜன், சுபாசினி, டிலக்ஷன், நிக்சன், ஆணன், அன்பு, தர்சிகா, விமல், சதீஸ், ராதிகா, சாந்தம், அசோக் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-06-2006 திங்கட்கிழமை இந்தியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை,
பிடாரி அம்மன் கோயிலடி,

தகவல்:
**சகோதரர்கள்.**

(50750)

### இளையதம்பி சின்னையா

(ஓய்வுபெற்ற ஊழியர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சின்னையா அவர்கள் நேற்று (01.06.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்புக் கணவரும் லோகநாதன் (ஜேர்மனி), கோவிந்ததாஸன் (கனடா), இரங்கநாயகி (அமரர்), வினோதினி, சுலோசனா, சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிறஞ்னி (ஜேர்மனி), சாந்தா (கனடா), குணரத்தினம், பாலசிங்கம், புஸ்பராசன், வித்தியானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் நடராசா (முன்னாள் ஊழியர், இ.போ.ச.), பாலாம்பிகை (கோதைநாயகி), பத்மலீலா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (50753)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(பிரபல தொழில் அதிபரும் R.V.G. பீடி கொம்பனி, R.V.G. மருந்தக ஸ்தாபகரும்)



பிரபல தொழில் அதிபரும் R.V.G. பீடி கொம்பனி, R.V.G. மருந்தக ஸ்தாபகருமான இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (01.06.2006) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமிப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் அன்பு மகனும் அமரர் சிவசுப்பிரமணியம் - கோசலைஅம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் ரூபசவுந்தரி அம்மாளின் பாசமிகு கணவரும் குமாரலிங்கம், சத்தியலிங்கம், ரேனுகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, வசந்தராணி, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயவர்மன், விஸ்ணுவரதன், அபர்னா, சஞ்ஜீவன், நிசாந்தன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆனந்தவேல், அமரர் நடனசிகாமணி, இரட்னசிகாமணி, அமரர் சிவஞானசுந்தரம், கமலாம்பிகை, மகேஸ்வரி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் உருத்ரசிகாமணி, அமரர் இரத்தினவடிவேல், அருமைச்செல்வம் (தென்இந்தியா - திருச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

*4 /2, ஆர்தர்ஸ் பிளேஸ்,*
*கொழும்பு - 4.*
*தொ.இல: 2592934*
*2596177* (50761) (25-12-49)

யாழ்.முகவரி:
*R.V.G. பீடி ஸ்தாபனம்,*
*இல.58, நல்லூர் குறுக்குவீதி, நல்லூர்.*
*தொ.இல: 021 222 6806*

## மரண அறிவித்தல்

### யோசேப் அலோசியஸ்



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட யோசேப் அலோசியஸ் அவர்கள் 30.05.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி யோண் யோசேப் அருளம்மா (தங்கரட்ணம்) தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற திரு.திருமதி அருளப்பு சவிரிமுத்து லேனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெசிந்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோசேப் அல்வினஸ் மார்க், இம்மனுவல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கமலர், றாணி, அஞ்சலினா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மரினாவின் மைத்துனரும் எமில், ராசா, டொனற்றஸ், நவரட்ணராஜா, மகேந்திரன், துரை, காலஞ்சென்ற செல்வீஸ் ஆகியோரின் மைத்துனரும் கமில்ரன், யூட், லெயிற்றன், விஜிதா, மல்கன், டன்ஸ்ரன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் கீதா, பாப்பா, வெனிசியா, ஜெறாட் ஆகியோ ரின் மாமனும் சுவரேஸ், சர்மிளா, சுஜித், சுதன், மிதுன், இவ்றின், மிவின், ஜெரிக்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22, கொண்டடி வீதியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து நாளை (03.06.2006) சனிக்கிழமை பி.பகல் 3 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*22, கொண்டடி வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (50751)(32)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த தமிழர்கள் கறுப்புப்பட்டிப் போராட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையைக் கண்டித்து தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

எதிர்வரும 12ஆம் திகதி புலம்பெயர் நாடுகளில் வீட்டை விட்டு வெளியில் செல்லும் ஈழத்தமிழர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்தவாறு வேலைத் தளங்கள் பாடசாலைகள் உட்பட போகும் இடங்களுக்கு செல்வதென முடிவெடித்துள்ளனர். இப் போராட்டத்தை மூன்று அல்லது ஐந்து நாள்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பக்கச் சார்பான முடிவையும் நீதி தவறிய செயலையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் உலகில் உள்ள ஏனைய மக்களுக்கு எடுத்துரைக்கும் ஒரு அடையாளப் போராட்டமாக இது உருப்பெறவுள்ளது.

இதேவேளை புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கையைக் கண்டிப்பதோடு அனைத்து தடைகளிலிருந்தும் ஈழத்தமிழர் விடுபட பிராத்தனை நிகழ்வுகளை இந்து ஆலயங்களிலும் கத்தோலிக்க தேவாலயங்களிலும் நடத்தவுள்ளனர்.

## நல்லூர் பகுதியில் படையினர் சோதனை

வலி.வடக்கு, ஜூன் 2

நல்லூர் பகுதியில் நேற்று நண்பகல் இராணுவத்தினரும் பொலீஸாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

நண்பகல் 11 மணியளவில் நல்லூர் ஆலயச் சுற்றாடல் மற்றும் சிவன் புது வீதி கோவில் வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய பகுதிகளில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# தமிழ் இளைஞர்கள் நால்வர் அம்பாந்தோட்டையில் கைது!

அம்பாந்தோட்டை, ஜூன் 2

புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் நான்கு பேரை அம்பாந்தோட்டைப் பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை ரத்துபஸ் கொடல்ல கடற்கரையோரத்தில் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்த இந்த இளைஞர்கள் குறித்து சந்தேகம் கொண்ட ஊரவர்கள், இதுபற்றி அம்பாந்தோட்டைப் பொலீஸாருக்கு அறிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே அந்த இடத்திற்குச் சென்ற பொலீஸார் நான்கு இளைஞர்களையும் கைதுசெய்தனர். இந்த இளைஞர்கள் பிபிலை, லுணுகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென விசாரணையில் தெரிய வந்தபோதும், தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் எவையும் அவர்களிடம் இருக்கவில்லையென்று அம்பாந்தோட்டைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# இணைத் தலைமைகளின் முடிவுக்கு இந்தியா வரவேற்பு

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடைபற்றி இதுவரை மௌனமாக இருந்து வந்த இந்தியா, வன்முறைகள் முடிவுக்குக்கொண்டுவரப்படா விட்டால், சர்வதேசத்தின் ஆதரவை இழக்க நேரிடும் என்று அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எச்சரிக்கை விடுத்து இணைத் தலைமை நாடுகள் எடுத்திருக்கும் முடிவை வரவேற்றிருக்கிறது. ''இலங்கையின் இன்றைய நிலைவரம் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எதுவோ அதன் அடிப்படையிலேயே இணைத் தலைமை நாடுகளின் கூட்ட முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கை அமைந்திருக்கிறது. ''இலங்கை இன்று ஓர் இக்கட்டான நிலையிலேயே உள்ளது. எந்த நேரமும் மோதல் வெடிக்கலாம் என்ற நிலையே காணப்படுகின்றது என இந்தியா உணருகிறது. ''இரு தரப்பாரும் பொறுமையைக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும். விடுதலைப் புலிகளும் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சு மேசைக்குப் போய் சமாதானப் பாதையைத் திறக்க வேண்டும். இந்தியாவின் விருப்பமும் இதுவே.'' - என்று இந்திய உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கின்றன எனவும் -

போக்குவரத்து ஒழுங்குகளை கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் செய்துவருவதாகவும் - கொழும்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்கா ஊடான பயணப் பாதுகாப்பு உறுதி உரிய வகையில் கிடைத்தால் மட்டுமே இந்தப் பயணத்தைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினர் முன்னெடுப்பர் எனப் புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கண்காணிப்புக் குழுவினரின் பங்கு பணி குறித்து தமது திட்டவட்டமான - அறுதியான - உறுதியான - சில நிலைப்பாடுகளை அனுசரணைத் தரப்பான நோர்வேக்கும், கண்காணிப்புக் குழுவினருக்கும், இலங்கை அரசுத் தரப்பினருக்கும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரியப்படுத்துவதற்காகவே நோர்வேச் சந்திப்புக்கு தமது உயர் மட்டக் குழுவினரை அனுப்ப புலிகளின் தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார் என்றும் அறிய வந்தது. (க)

## அனைத்துக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை மற்றும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை ஆகியன குறித்து இன்றைய கூட்டத்தின் போது தமிழ்க் கட்சிகள் பிரஸ்தாபிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமைதி முயற்சிகளுக்கான சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் கட்சிகளின் உறுப்பினர்களை இணைத்து அமைதிப் பேச்சுகளுக்கான ஆலோசனைக் குழுவொன்றை அமைப்பது குறித்தும் -

அமைதி முயற்சிகளின் இறுதித் தீர்வொன்று தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் யோசனை என்ன என்பது பற்றியும் -

ஜனாதிபதி இன்றைய கூட்டத்தின்போது கருத்துகளைக் கேட்பாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## கச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸார் இருவரையும் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி.யின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டார். சம்பவத்தையடுத்து உடனடியாக ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு விரைந்த இராணுவத்தினரும், பொலீஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என ஈ.பி.டி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது. (க)


## மரண அறிவித்தல்

### சின்னப்பொடி கணபதிப்பிள்ளை



அம்பனை மேற்கு, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது ஏழாலையில் வசித்து வந்த சின்னப்பொடி கணபதிப்பிள்ளை (01.06.2006) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளையின் கணவரும் சரோஜினிதேவி, செல்வராசா, சரஸ்வதிதேவி, சற்குணதேவி, தேவராசா, ஜெயராசா, யோகராசா, வரதராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை, செல்வராணி, பாலசிங்கம், நந்தகுமார், பவானி, தேவகி, சுகந்தினி ஆகியோரின் மர்மனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2006) முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொத்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளிசிட்டி ஏழாலை மேற்கு,
ஏழாலை. (பெரிய சங்கத்தடி)

தகவல்:
க.யோகராசா
(மகன் - தம்பி மெக்கானிக்)


# பிரபாவை நேரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினசரி என்னைத் தாக்குகின்றீர்கள். எல்லாம் உடனுக்குடன் எனக்குக்கிடைக்கின்றன. ஆனால், எனக்கு அதில் கோபமில்லை. உங்களை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. நீங்கள் என்ன செய்ய முடியும்? உங்கள் பத்திரிகையைக் கொண்டு செல்வதற்கு உங்களுக்குரிய வேலையைச் செய்கிறீர்கள். அதைத் தவறு என்றும் கூறமுடியாது.'' - என்றார் ஜனாதிபதி.

''ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் இனப் பிரச்சினையத் தீர்க்கும் விடயத்தில் தேவைக்கு அதிகமாக மேலும் ஒரு மைல் கூடவும் செல்லத் தயாராக இருக்கின்றீர்கள் என்று திரும்பத் திரும்பக் கூறினீர்களே. அப்படிச் செய்வதற்கு இப்போதும் நீங்கள் தயாரா?'' - என்று 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் கேள்வி எழுப்பினார்.

''நல்ல கேள்வி. பொதுக் கலந்துரையாடலிலேயே இக்கேள்வியை நீங்கள் எழுப்பியிருக்கலாமே? அப்படி ஒரு கேள்வி உங்களிடமிருந்துவரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். எல்லோருக்கும் பதில் சொல்லுவதாக இருந்திருக்கும். ஏற்கனவே நான் தேவைக்கு அதிகமாக முன்னேறிச் செயற்பட்டிருக்கிறேன். மறுபக்கத்திலிருந்து ஆக்கபூர்வமான சைகை கிடைத்தால்தானே மேலும் செல்ல முடியும்? அதற்குத்தான் நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும். உங்கள் பக்கத்தில்தான் அந்தப் பொறுப்புத் தங்கியுள்ளது.'' - என்றார் ஜனாதிபதி.

''தேர்தல் பிரசார சமயத்தில், தேவைப்பட்டால் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசவும் தயார் என்று நீங்கள் கூறிவந்தீர்கள். இப்போது அமைதி முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் போக்கும் ஓர் எத்தனமாக அந்தச் சந்திப்பை நீங்கள் மேற்கொள்ளக் கூடாதா? அதற்கு நீங்கள் தயாரா?'' - என்று ஆசிரியர் ஜனாதிபதியிடம் கேட்டார்.

''ஏன் இல்லை? அதற்கு நான் எப்போதோ தயார். ஏற்கனவே அத் தகவலை பிரபாகரனுக்கும் அனுப்பி விட்டேன். நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மூலம் கூட இந்தத் தகவலை புலிகளின் தலைவருக்கு அனுப்பியிருந்தேனே.....! பிரபாகரனைச் சந்திக்க நான் தயார்!'' - என்றார் ஜனாதிபதி.

''அப்படியானால் நீங்கள் வன்னி சென்று தலைவர் பிரபா கரனைச் சந்திக்கத் தயாரா?'' - என்று ஆசிரியர் கேட்டார்.

''ஐயையோ....... இல்லை, இல்லை. இப்போதைய நெருக்கடியில் நான் வன்னி செல்ல முடியுமா? அது சாத்தியமா? முன்னைய சுமுகநிலை இருக்கும் போதென்றால் நான் வன்னிக்கு என்ன, நேரடியாக முல்லைத்தீவுக்கே சென்று பிரபாகரனைச் சந்தித்திருப்பேன்; சந்திக்கத் தயாராக இருந்தேன். ஆனால், இப்போது நிலைமை அதற்குப் பொருத் தமானதல்ல. அதற்கு நான் புலிகள் மீது குறையோ, நம்பிக்கையீனமோ கூறவில்லை. எனக்குத் தெரியும் வன்னியில் புலிகளுக்கு அப்பால் உள்வீட்டுக் குழுக்கள் பல இயங்குகின்றன. அவற்றால் ஆபத்து நேரலாம். அதனால்தான் வன்னிக்கு இப்போது செல்லமுடியாது என்று கூறுகின்றேன்.'' - என்றார் ஜனாதிபதி.

ஊடகத் தலைவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பொதுவாக உரையாடுகையில் பல்வேறு விடயங்கள் குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபித்தார்.

''அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி குழுவும் வன்முறைகளுக்குக் காரணம் என்று இணைத் தலைமை நாடுகளின் அறிக்கையில் முதல் தடவையாகக் கூறப்பட்டுள்ளதே. இந்த வன்முறைகளுக்கு அரசு பொறுப்பில்லையா? அது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?'' - என்று ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது.

''அரசில் இடம்பெற்றிருப்பவர் கள் வன்முறையில் - படுகொலைகளில் - ஈடுபட்டால் அது அரசையே தாக்கும் செயலாகும்.

''ஆனால், யார் மீதாவது நடவடிக்கை எடுப்பதாயின் அதற்குத் தகுந்த சாட்சியங்கள், ஆதாரங்கள் தேவை.

''திருகோணமலையில் ஐந்து இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிப் படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. நாம் அவர்களைத் தடுத்து வைத்து விட்டு, அவர்களின் துப்பாக்கிகளை இரசாயனப் பகுப்பாய்வாளர்களுக்கு அனுப்பினோம். அந்தக் கொலைகளுக்குக் காரணமான குண்டுகள் அந்தத் துப்பாக்கிகள் மூலம் தான் சுடப்பட்டன என்ற ஆதாரம் அந்த ஆய்வறிக்கையில் கிடைத்தால் நாம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், அப்படி அறிக்கை கிடைக்கவில்லை.

''உரிய ஆதாரங்கள், சாட்சியங்கள் இன்றி யார் மீதாவது நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. பிரபாகரன் வேண்டுமானால் அப்படிச் செய்யலாம். ஆனால், நாங்கள் அவ்வாறு செய்ய முடியாது. ஏனென்றால, நாம் சட்டபூர்வமான அரசு. எமக்கெனச் சட்டங்கள் உள்ளன. அவற்றை மீறி நாம் நம்பாட்டில் செயற்படவே முடியாது.

''ஏதேனும் சர்வதேச அறிக்கை ஒன்று கூறுவதை வைத்துக் கொண்டு, அதில் தங்கி நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. அப்படி நடவடிக்கை எடுத்தால் பாதிப்புறுவோர் நாம் அநீதி இழைத்து விட்டோம் என எம் மீது குற்றம் சுமத்த மாட்டார்களா?

உலகம் முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்கள் கொழும்பில் தங்கியிருந்த உலக ஊடகவியலாளர்களுக்கான சுதந்திர தினத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள 'உதயன்' பத்திரிகை நிறுவனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நான் அதைக் கடுமையாகக் கண்டிக்கின்றேன். இத்தாக்குதலை என்மீது மேற்கொள்ளப்பட்ட - தனிப்பட்ட - தாக்குதலாகத்தான் கருதுகிறேன். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து அவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவர நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளன.

''ஆனால், யார் தாக்கினார்கள் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள், சாட்சியங்கள் இல்லாமல் நாம் அவசரப்பட்டு யார் மீதும் நடவடிக்கை எடுக்கமுடியாது.

''இணைத் தலைமைகளோ, மன்னிப்புச் சபையோ அறிக்கை விடுவதை மட்டும் ஈ.பி.டி.பி. மீது குற்றம் சுமத்துவதற்குப் போதுமான ஆதாரங்களாக நாம் கருதமுடியாது. உரிய ஆதாரங்கள், சாட்சியங்கள் இருக்குமானால் தவறு செய்தோரைத் தண்டிக்கவும் நான் தயங்க மாட்டேன். ஆதாரங்கள், சாட்சியங்கள், சான்றுகள் இல்லாமல் கூறப்படும் பெரும் குற்றச்சாட்டுகளை மாத்திரம் வைத்து நாம் நடவடிக்கை எடுக்கவே முடியாது. ஈ.பி.டி.பி. மீதான குற்றச்சாட்டுக்கும் இது பொருந்தும்.'' - என்றார் ஜனாதிபதி.

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிவுகளினால் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை குறித்து ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட போது, ''பொதுத் தேர்தலில் போட்டியிடாதவர் நியமன முறையில் எம்.பியாகலாம் என்றால் தேர்தலில் நிற்காதவர் மாநகர மேயராகவோ, நகர சபை மற்றும் பிரதேச சபை, கிராமோதய சபை ஆகியவற்றின் தலைவராகவோ வருவதில் தவறோ, சட்டப்பிரச்சினையோ இருக்காது என்று நான் கருதுகிறேன். என்றாலும், இந்த விடயம் நீதிமன்ற முறையில் தீர்க்கப்பட வேண்டி ஏற்படலாம்'' - என்றார் ஜனாதிபதி.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்த முயற்சியும் புதிதாகவே ஆரம்பிக்கப்பட வேண்டும். இது புதிய அரசு, புதிய நெறியாள்கை. எனவே, பழைய தீர்மானங்கள், முடிவுகள், உடன்பாடுகளைக் கைவிட்டு விடுங்கள். இனிமேல் புதிதாக ஆரம்பிப்போம். ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம்.

''இந்திய மொடல்', 'சுவிஸ் மொடல்', 'கனடா மொடல்' என்று பல்வேறு மாதிரிகளைக் கவனிப்பதை விட்டு, இலங்கைக்குத் தீர்வு காண்பதற்கான 'இலங்கை மொடல்' ஒன்றைக் கண்டுபிடிப்போம்.

''அந்தத் தீர்வின் மாதிரி இப்படித்தான் இருக்கும் என்று என்னால் கூறமுடியாது. ஏனெனில், சகல தரப்புகளும், கட்சிகளும் ஒன்று கூடிப் பேசி, உடன்பட்டு காணவேண்டிய - எட்டப்பட வேண்டிய - முடிவு அது. நானாக எதையும் கற்பனை பண்ணிக் கொண்டு மக்கள் மீது அதனைத் திணிக்க விரும்பவில்லை. நீங்களே தீர்மானியுங்கள். பழைய முடிவுகள், தீர்மானங்களை கட்டுப்படுத்தும் விடயங்களாக வைத்திருக்காமல் அவற்றைத் துறந்து விட்டு புதிய வழியை தீர்வுக்கு நாடுங்கள்.'' - என்றும் ஜனாதிபதி கூறினார்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் யாழ். கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சம்பவத்தையடுத்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தியது. வவுனியா பொலீஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)


N.C.A
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
A/L 2008
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்: 03.06.2006
சனி 4 p.m.

| | |
|---|---|
| TAM:- | நாக.தமிழிந்திரன் |
| H.C:- | ஜெயக்குமார் |
| LOG.:- | சுதன் |
| GEO.:- | பாபு |
| DRAMA:- | சீலன் |
| ECO.:- | வரன் |
| B.STU.:- | தாஸ் |
| ACC.:- | சதீஸ் |

முகாமைத்துவ உதவியாளர்
அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்
போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புகள்
* பொதுவிவேகம் * மொழியறிவு
* சனி, ஞாயிறு 10.30 - 1.00 வரை D.M.I யாழ்.நகரில் நடைபெறும்.
* இப்பரீட்சைகளுக்கு பயன்படுத்தக் கூடிய வழிகாட்டி நூல் தவசேகர் ஆசிரியரின் வகுப்புகளிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் விற்பனையில் உள்ளது.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org